விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 18 வியாழக்கிழமை (02.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லன் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகளுக்கு எதிரான தடையை மேலும் நீடித்தது அமெரிக்கா

(வாஷிங்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எதிரான தடையை அமெரிக்க அரசாங்கம் நீடித்துள்ளது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் புதிய அறிக்கைகளின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை அந்நாட்டு அரசாங்கம் நீடித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பலத்தை அறிய பயிற்சி இந்தியா அறிவிப்பு

(சென்னை)

இலங்கையின் படை பலத்தை அறியவே, இலங்கைப் படைகளுக்கு இந்தியா பயிற்சி கொடுத்து வருவதாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கைக்கு எதிராகப் போர் நடந்தால், (20ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த பிரதமர் பசில் ராஜபக்ஷ?

(கொழும்பு)

அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை, பிரதமர் பதவிக்கு நியமிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் முன்நின்று செயற்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பிரதி அமைச் (19ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடத்தப்படுவோர் துன்புறுத்தப்படுவதில்லை



### அமைச்சர் பீரிஸ் விளக்கம்

(கொழும்பு)

பிரித்தானியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழ் தஞ்சக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுவதில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிரித்தானிய எல்லைப் பாதுகாப்பு பிரிவினருடன் (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிரான பேரணி யாழ்ப்பாணம் வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

மக்களை வதைக்கும் ஆட்சிக்கு எதிராக அணி திரள்வோம் என்ற தொனிப் பொருளில் மக்கள் விடுதலை முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத் தொடர் பேரணி நேற்று மாலை யாழ்.நகரை வந்தடைந்தது.

கடந்த 26-ம் திகதி தெய்வேந்திர முனையில் ஆரம்பமான இந்த வாகன கண்டனப் பேரணியின் ஆறாவது நாளான நேற்று யாழ்.பஸ் நிலையத்தினை வந்தடைந்தது.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்தக் கண்டனப் பேரணியில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் சுமார் 2 ஆயிரம் பேருக்கு மேல் பங்குகொண்டதோடு 400 இற்கும் மேற்பட்ட வாகனங்களும் இந்தப் பேரணியில் பங்கு கொண்டன.

இதில் (19ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவுக்கு ஏற்றுமதி நாணய நிதியம் ஆலோசனை

(கொழும்பு)

இந்தியாவிற்கும் சீனாவுக்குமான ஏற்றுமதிகளை அதிகரிக்க இலங்கை முயற்சிக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

ஏற்றுமதியை அதிகரிக்கவும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் சீனா மற்றும் இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் வழியமைக்கும் என தெரிவித்துள்ளது.

அந்நிய செலாவணி வீதம், மின்சாரக் கட்டணம் உயர்வு, கடுமையான தொழிலாளர் சட்டங்கள் என்பவற்றினால் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மற்றும் மாலை (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த அரசின் ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை

### ஜே.வி.பி. தலைவர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் நீதவான்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லையென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கண்டனப் பேரணி (20ஆம் பக்கம் பார்க்க)



## சிவில் சமூகத்தின் உதவி பெற தேசிய சமாதானப் பேரவை ஆலோசனை

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் செயற்றிட்டத்தை அமுல்படுத்த சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என தேசிய சமாதான பேரவை அறிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படையாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை தேசிய செயற்திட்டத்தை பயன்படுத்திக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது.

சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் தேசிய செயற்திட்டத்தை மேலும் காத்திரமானதாக உருவாக்க முடியும் என தேசிய சமாதான பேரவை தெரி வித்துள்ளது. தேசிய செயற்திட்டத்தை கீழ் மட்டம் வரையில் கொண்டு சேர்க்க ஒத்துழைப்பு வழங்க முடியும் என குறிப்பிட்டுள்ளது.

தேசிய செயற்திட்டம் தொடர்பான ஆவணம் மக்களினால் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிமையான வடிவில் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக் காட்டியுள்ளது. [illegible]

## இந்தியாவில் நேற்று இரவு 4 இடங்களில் குண்டு வெடிப்பு

(புனே)

மகாராஷ்டிர மாநிலம் புனே நகரில் நேற்று இரவு 4 இடங்களில் அடுத்தடுத்து குறைந்த சக்தி கொண்ட வெடிகுண்டுகள் வெடித்துள்ளன. இதில் இரண்டு பேர் காயமடைந்தனர் உயிரி[illegible]இல்லை.

மக்கள் அதிகம் நிறைந்திருந்த பகுதிகளில் இந்தக் குண்டு வெடிப்புக்களை தீவிரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர். மக்களை பீதிக்குள்ளாக்கும் நோக்கிலேயே இந்த வெடிகுண்டு சம்பவத்தை தீவிரவாதிகள் நிகழ்த்தியுள்ளதாக கருதப்படுகிறது. (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அரசுக்கு எதிரான பேரணிக்கு ஆதரவு வழங்கிய பொலிஸார்!

## நன்றி கூறினார் சோமவன்ச

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)யின் ஆர்ப்பாட்டத்திற்கு மிகவும் பொறுப்புணர்வுடன் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியதோடு அக்கட்சியின் தலைவரின் பாராட்டினையும் பெற்றுக் கொண்டனர்.

தெய்வேந்திர முனையில் ஆரம்பமான ஜே.வி.பியின் கண்டன வாகனப் பேரணி நேற்று மாலை யாழ்.நகர் பகுதியை வந்தடைந்தது.


யாழ். பஸ் நிலையம் முன்பாக வீதியை இடைமறித்து நிறுத்தப்பட்ட வாகனம் ஒன்றில் ஏறி அக்கட்சியின் தலைவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக தமது கருத்துக்களைக் கொட்டித் தீர்த்தனர்.

சுமார் 45 நிமிடம் இந்தக் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பும் வகையில் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதும்,

ஆர்ப்பாட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தாது மிகவும் பொறுப்புணர்வுடன் பாதுகாப்பு வழங்கியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இறுதியில் பாதுகாப்பு வழங்கிய பொலிஸாருக்கு நன்றிகளைத் தெரிவித்த ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொலிஸாரும்;இராணுவத்தினரும் எமது கண்டனப் பேரணிக்கு ஆரம்பத்தில் இருந்தே ஆதரவு கொடுத்து வருகின்றனர் எனவும் அரசாங்கத்தினால் அவர்களும் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதே இதற்கு முக்கிய காரணம் எனவும் தெரிவித்தார். (எ-6)



# பிரிட்டிஷ் குழு இன்று யாழ்.வருகை

(கொழும்பு)

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் அடங்கிய குழுவினர் இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் இவர்கள் மக்கள் மீளக்குடிய மர்த் தப்பட்ட அரியாலை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளனர்.

தொடர்ந்து, யாழ்.போதனா வைத்திய சாலைக்கும் விஜயம் செய்யும் இவர்கள், யாழ்.அரச அதிபர், வர்த்தக சமூகத்தினர் உள்ளிட்ட பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

மேலும் கிளிநொச்சியின் மிதிவெடி அகற்றப் பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்வதோடு மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது. (எ-11)

# இலங்கையின் அபிவிருத்தியில் சீனா தலைவலியில் அமெ.யும்,இந்தியாவும்

## அமெரிக்க அரசியல் விஞ்ஞானி கருத்து

(கொழும்பு)

பலமுள்ள நாடுகளின் அதிகார மோதல்களுக்கு களமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதாகவும் இந்து சமுத்திர பிராந்திய வலயத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக இலங்கை உருவாகியுள்ளது எனவும் அமெரிக்க அரசியல் விஞ்ஞானி சுமிட் கங்குலி தெரிவித்துள்ளார்.

தென் ஆசியா தொடர்பான அமெரிக்காவின் `வெளிவிவகாரக் கொள்கை என்ற தொனிப் பொருளில் உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்,

பிராந்திய வலயத்தில் சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்காவுடன் உறவுகளைப் பேண வேண்டியது அவசியமானது.

அமெரிக்காவுடன் எவ்வாறான உறவுகளைப் பேணுவது என்பதனை இலங்கை அரசியல்வாதிகள் மிகவும் நிதானமாக தீர்மானிக்க வேண்டும்.

மனித உரிமை விவகாரங்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல் தொடர்பான விடயங்கள் காரணமாக அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் சீனாவின் கடுமையான ஆதிக்கம் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா தெற்காசிய நாடுகளுடன் கூடுதல் உறவினைப் பேண ஆர்வம் காட்டும்.

அத்துடன் சீனாவின் வருடாந்த இராணுவச் செலவுகள் 100 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# காந்தி சிலை உடைப்பு இந்திய அரசு கடுப்பு

## விசாரணைக்கு பணிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சேதமாக்கப்பட்ட மகாத்மா காந்தியின் உருவச் சிலையை மீளவும் புனரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் சிலையைச் சேதப்படுத்திய குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அரியாலை சனசமூக நிலைய முன்றலில் இருந்த மகாத்மா காந்தி சிலை கடந்த சனிக்கிழமை இரவு சேதமாக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில் இலங்கையில் சேதமாக்கப்பட்ட மகாத்மா காந்தியின் இரண்டாவது சிலை இதுவாகும்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி மகாலிங்கம், இந்தச் சிலையைத் திறந்து வைத்திருந்தார்.

இந்தச் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவுடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா பேசியுள்ளார்.

இதன்போதே காந்தி சிலையை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் குற்றவாளிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரக அதிகாரி மகாலிங்கம் யாழ்.அரச அதிபர் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் ஆகியோரைச் சந்தித்து இதுபற்றி முறையிட்டுள்ளார்.(எ-2)

# இசட் புள்ளி மீள் கணிப்பீட்டின் பின் 1, 675 மாணவர்கள் முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இசட் புள்ளி மீள் கணிப்பீட்டின் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மாணவர்களிடம் இருந்து ஆயிரத்து 675 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவ் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முந்தைய இசற் புள்ளிப் பட்டியல் செல்லுபடியற்றதாக உயர் நீதிமன்றம் தெரிவித்த பின்னர் அப் பட்டியலை அதிகாரிகள் பின்பற்ற முடியாதுஎன இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மகாநாம கூறினார்.

நீதிமன்றத் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய அவர், இசட் புள்ளி மீள் கணிப்பின் பின்னர் ஏமாற்றம் அடைந்த மாணவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபருடன் கலந்துரையாடுமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் உள்ளீர்ப்பதற்காக அடுத்த வருடம் பல்கலைக்கழ்கத்திற்கு சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரம் பேரினால் அதிகரிக்கப்படும் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ண முன்னர் கூறினார். (எ-11)

# ஆயுதம் இன்றிப் பிரசாரம் ரி.எம்.வி.பி அறிவிப்பு

தமது கட்சியிடம் எந்தவிதமான சட்ட விரோத ஆயுதங்களும் இல்லையெனவும் தாம் ஜனநாயக ரீதியாக தேர்தலில் ஈடுபட்டு வருவதாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

தமது கட்சி ஆயுதங்களுடன் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருவதாக எவரேனும் குற்றம் சுமத்துவார்களாயின் அதனை முற்றாக நிராகரிப்பதாகவும்,போர் முடிபடைந்த பின்னர், தம்மிடம் இருந்த அனைத்து ஆயுதங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டதாகவும், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி சிறந்த செயற்பாடுகளைக் கொண்ட நபர்களையே வேட்பாளர்களாக தெரிவு செய்துள்ளது என்றும் அவர்களின் கடந்த காலம் தொடர்பாக கேள்வி எழுப்பினால், அதற்கு பதிலளிக்கப்படும் எனவும் பிரசாந்தன் மேலும் கூறியுள்ளார். (எ-11)

மகளிருக்கான ஓகஸ்ட்
விடுமுறைகால 20 நாள் வகுப்புகள்
பாடசாலை ஆசிரியைகள், வெளிநாடு செல்ல விரும்புபவர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்து நிற்பவர்கள், உள்ளூரிலேயே தொழில் புரிய விரும்புபவர்கள், மற்றும் ஆர்வமுள்ள அனைவருக்கும் உகந்த பயன்மிகு பயிற்சிகள்!
✿ முக அழகுக் கலை (Facial):-(B)பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், Jovees தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட பலவகை.
✿ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
✿ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல்,
அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.
முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)
✿ 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 விதமான முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.
மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
✿ தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், தைக்கும் பயிற்சிகள்
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது
ஆரம்பம் - 06-08-2012 திங்கள் காலை 9.30 மணி
யாழ் கலாலயா பயிற்சியகம் 1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்
Yaarl Kalaalayah Academy, Jaffna.
மேலும் விபரங்களை பி.ப 4.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

அரியதொரு வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ரூ.35,000 வருமானத்துடன் வேலைவாய்ப்பு.ஆண்டு 9 படித்திருந்தாலே போதுமானது. சந்தைப் படுத்தல் முகாமைத்துவத்துடன் தரப்படும் ஆறு மாத கால பயிற்சியை நீங்கள் முடித்தாலே போதுமானது. பயிற்சியின் முடிவில் சர்வதேச கம்பனியான GRANTON GROUP COMPANY இன் சான்றிதழைப் பெறுவதோடு,எங்களின் கிளையொன்றிலேயே வேலையும் கிடைக்கும். முதலில் பயிற்சியை முடிக்கும் 10 பேருக்கு தாய்லாந்து சுற்றுப் பயணத்துக்குரிய விமானப் பயணச் சீட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
அழைக்கவேண்டிய இலக்கம்:
021 721 2045, 0778330074, 0772151014
▶ பயிற்சிக் காலத்தில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.
(143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### எது தடை?

ஒரு ஊரிலே கோயில் இருந்தது. மிகவும் பழைய கோயில்... உள்ளே போவதற்கு பயமாக இருக்கும். எந்தநேரத்திலே இடிந்து விழுமோ என்ற பயம். அப்படி இருந்தபடியால் யாரும் துணிந்து சாமி கும்பிடப் போவதில்லை.

இதனால் கோவிலுக்கு வரும் கூட்டம் சற்றுக் குறைந்து போக ஆரம்பித்துவிட்டது.

கோயில் நிர்வாகிகள் எல்லோரும் கூடி அமர்ந்திருந்து பேசினார்கள். என்ன செய்யலாமென யோசனை செய்தார்கள்.

கோவிலின் சிதைந்த பகுதிகளை பழுது பார்த்தார்கள். சில இடங்களை வர்ணம் பூசி அழகுபடுத்தினார்கள். ஏதோ ஊரிலே கோவில் ஒன்று உள்ளதென்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இருந்தாலும் கோயில் இருக்கும் நிலைமை மக்களுக்குத் தெரியும். அடியார்களின் வருகை குறைந்து போய்விட்டது. ஒரு கட்டத்திலே யாருமே வராத நிலைமை உண்டாகி விட்டது.

மறுபடியும் கோவில் நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டம் கோயிலினுள் நடக்கவில்லை. வெளியில்தான் நடந்தது. உள்ளே செல்ல அவர்களுக்கு துணிச்சல் இல்லை.

அந்த வழியாக போகும் வழிப்போக்கர்கள் கூட வேகமாக அந்த இடத்தைக் கடந்துபோக ஆரம்பித்துவிட்டார்கள்.

கோயில் நிர்வாகிகள் வெளியில் கூட்டம் நடத்தி நான்கு தீர்மானங்களை எடுத்தனர்.

முதலாவது தீர்மானம் இந்தக் கோயிலை இடிப்பது என்ற முடிவை குழுவினர் மனவருத்தத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

இரண்டாவது தீர்மானம் என்னவெனில், இடிக்கப்படும் கோயிலுக்கு ஒத்தபடியாக அதே இடத்தில் இன்னொரு கோயில் கட்டப்பட வேண்டும்.

மூன்றாவது தீர்மானம்; பழைய கோயிலின் கதவுகள் அதிலேயிருந்து பிரித்து எடுக்கப்படும் செங்கல் ஆகியவற்றை புதுக்கோயில் கட்டப் பயன்படுத்த வேண்டும். பழைய அஸ்திவாரத்திலேயே புதிய கோயிலின் கட்டடம் எழுப்பப்பட வேண்டும்.

நாலாவதாக ஒரு முக்கியமான தீர்மானத்தையும் கொண்டு வந்து அதையும் ஏகமனதாக நிறைவேற்றியது.

புதிய கோயிலைக்கட்டி முடிக்கும் வரைக்கும் பழைய கோவிலை இடிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இது எவ்வாறு சாத்தியமாகும்.

பழைய கோவிலை இடித்தால்தான் புதிய கட்டடம் அதில் கட்டலாம்.

இதேபோல்தான் பல விடயங்களில் நாம் நடக்கிற முறையும் அமைகிறது.

வாழ்க்கையிலே முன்னேற்றம் வேண்டும் என ஆசைப்படுவோம். அதே நேரத்திலே அந்த முன்னேற்றத்திற்கு எது தடையாக இருக்கிறதோ அதை விட்டுவிடவும்மாட்டோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## குடாநாட்டின் கடற்றொழில் அபிவிருத்திக்கு 91 மில்லியன் ரூபாவை ஐ.ஓ.எம்.ஒதுக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடற்றொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு ஐ.ஓ.எம்.நிறுவனம் 91 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது என யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனத்தின் நிதி உதவியுடன் பாஷையூரில் இறங்குதுறை புனரமைப்பு செய்யப்படவுள்ளதோடு சேந்தான்குளம் பகுதியில் பொது மண்டபம் ஒன்றும் வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் ஐஸ்கட்டி தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இதில் பாஷையூரில் இறங்குதுறை புனரமைப்புக்கென சுமார் 50 மில்லியன் ரூபா நிதியை ஐ.ஓ.எம். நிறுவனம் செலவிடுகின்றது.

அத்தோடு சேந்தான்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ள பொது நோக்கு மண்டபத்திற்கு 14 மில்லியன் ரூபாவினையும் தாளையடியில் ஐஸ்கட்டித் தொழிற்சாலை அமைக்க சுமார் 25 மில்லியன் ரூபாவினையும் அதே இடத்தில் உப்பு அரைக்கும் ஆலையினை அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் முகமாக நேற்றுக் காலை ஐ.ஓ.எம். நிறுவனப் பிரதிநிதிகள் குழு யாழ்.மாவட்டத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டது.

இந்தக்குழுவினர் பாஷையூரில் புனரமைக்கப்படவுள்ள இறங்குதுறையினை பார்வையிட்டதோடு புனரமைப்பு பணிகளையும் ஆரம்பித்து வைத்தனர்.

அத்தோடு சேந்தான்குளம் பகுதிக்கும் தாளையடிக்கும் இந்தக் குழுவினர் விஜயத்தினை மேற்கொண்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## அலம்பில் றோ.க.பாடசாலையில் இன்று நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய முல்லை. மாவட்ட கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் நலன் கருதி தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பன இணைந்து இந் நடமாடும் சேவையை செயற்படுத்தவுள்ளன.

அலம்பில்றோ.க. பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ள இந் நடமாடும்சேவை செம்மலை, செம்மலை மேற்கு, அலம்பில் வடக்கு, தெற்கு, குமுழமுனை மேற்கு, கிழக்கு, மத்தி , தண்ணி முறிப்பு, குமாரபுரம், உப்புமாவெளி, மதவள சிங்கன் குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கானது ஆகும்.

இந்நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள், காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகளை பதிவு செய்தல், தேசிய ஆள் அடையாள அட்டை , முதியோர் ஆள் அடையாள அட்டை, தொலைந்த அடையாள அட்டை ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் பொலிஸ் சேவைகளும் நடைபெறும். இச்சேவைக்கான கடித உறை, முத்திரைகளை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு இலவசமாகச் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-267)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 90 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 90 | 110 |
| தக்காளி | 100 | 100 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 55 | 60 | 50 | 70 |
| கரட் | 100 | 100 | 100 | 140 |
| பூசணி | 50 | 30 | 50 | 60 |
| புடோல் | 45 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 60 | 75 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 120 | -- |
| பயற்றங்காய் | 80-90 | 80 | 90 | 40 |
| லீக்ஸ் | 120 | 160 | 110 | 140 |
| பீற்றூட் | 40 | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 90 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 60-100 | 160 | 100 | 120 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 6-10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 100 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 | 18-20 |

## இராசி பலன்

02.08.2012
(ஆடி 18, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பூரணை முற்பகல் 9.34 மணிவரை
திருவோணம் முன்னிரவு 10.51 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
நல்லைக்கந்தன் மஞ்சம்.

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், உற்சாகமான நாள்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த சொல் யுத்தம் சுமுகமாக முடியும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்புகள் செலவாகாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, வேலைச் சுமை அதிகரிக்கும், அமைதிக் குறைவான நாள்.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**சிங்கம்** பகைவர்கள் விலகுவர், சுப காரியங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமான முக்கிய முடிவெடுப்பீர்கள், தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் பணி புரியும் நாள்.

**கன்னி** உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், மனநிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமை சேரலாம், தொழில் முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள்.

**துலாம்** சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், வாகன யோகமுண்டு.

**விருச்சிகம்** உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியமான நாள், முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** செய்தொழிலில் மேன்மையும் உயர்வுமுண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், ஜனவசியமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** வேலைச் சுமையால் உணர்ச்சி வசப்படுவீர்கள், பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறலாம், வருமானம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும், உறவினர் வருகையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து நிலையத்தில் கழிவுப் பொருட்கள்

## மூக்கைப் பொத்தும் மக்கள்

கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் கழிவுப் பொருட்கள் தேங்கிக் காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த பேருந்து நிலையத்தில் காணப்படும் இக்கழிவுப் பொருட்கள் நீண்ட காலமாக அகற்றப்படாது காணப்படுகிறது.

மழைக்காலம் நெருங்குவதால் இக் கழிவுப் பொருட்களில் மழைநீர் தேங்கி நின்று டெங்குநோய் பரவக்கூடிய அவல நிலையும் உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு நீண்டகாலமாக தேங்கிக் கிடக்கும் இக்கழிவுப் பொருட்களை அகற்ற முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-254)

# இருபது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

(மிருசுவில்)

சாவகச்சேரி கச்சாய் வீதியிலிருந்து அல்லாரை அறுகம்பல வீதி ஊடாக அல்லாரை பாடசாலை செல்லும் வீதி 20 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாதுள்ளது.

இவ்வாறு நீண்டகாலமாக புனரமைக்கப்படாத இவ்வீதியானது குழிகள் நிறைந்ததாகவும் கற்கள், மண்கள் நிறைந்து காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதி புனரமைக்கப்பட வேண்டும் என உரியவர்களிடம் பலமுறை முறைப்பாடு செய்ததையடுத்து வீதியை உரியவர்கள் வந்து பார்வையிட்டனர்.

ஆனால் புனரமைப்பதற்கான வேலைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் இவ்வீதியால் பயணிக்கும் பயணிகள் மற்றும் வாகனங்கள் விபத்துக்களையே எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைத்து உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

# வாய்க்காலை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஏவி வீதிக்கும் 5 ஆம் குறுக்கு வீதிக்கும் இடைப்பட்ட வாய்க்கால் பகுதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழைக்காலங்களுக்கு முன்பு மேற்படி வாய்க்கால் பகுதியை புனரமைத்துத் தருமாறு கொழும்புத்துறை மக்கள் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மழைக்காலங்களில் இவ் வாய்க்காலால் பெருமளவு நீர் வழிந்து ஓடுவதால் 10 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இவ்வாய்க்காலை வெகு விரைவாக புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-51)

# தொலைபேசியில் ஆபாசப்படம்; நபருக்கு ஒரு இலட்சம் அபராதம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படம் பதிவு செய்து வைத்திருந்த நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு கம்பர் மலைப் பகுதியில் தனது கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படத்தை பதிவு செய்து வைத்திருந்த நபருக்கு எதிராக வல்வெட்டித்துறை பொலிஸார் வழக்கைப்பதிவு செய்தனர்.

குறித்த நபரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி தீர்ப்பை வழங்கினார். (அ-3-24)

# பரிசளிப்பு விழா

(புன்னாலைக்கட்டுவன்)

யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆ.சி.நடராஜா கலையரங்கத்தில் வித்தியாலய அதிபர் க.கனகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன், கௌரவ விருந்தினராக வடமாகாண திட்டமிடல் செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ம.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-78)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கையில் பலபாகங்களிலும் வெளிநாடுகள் பலவற்றிலும் ஆலயங்களில் சமயக்கிரியைகளைத் தலைமையேற்று பணிசெய்வதோடு சமய விளக்கப் பிரசங்கங்களும் ஆன்மீக உரைகளும் நிகழ்த்தி சமயத்தினூடாக சமூகப்பணிகளும் ஆற்றி வருகின்றார்.

பல சமயநிறுவனங்களில் பொறுப்பான பதவிகள் வகிப்பதோடு இந்துக் குருமார் ஒன்றியத்தின் பொருளாளராகவும் கடந்த காலங்களில் சேவை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பண்டத்தரிப்பு, சில்லாலை, நிச்சாமம், விளான், இளவாலை, மாதகல், சாந்தை, வடலியடைப்பு, இடும்பன்பிரதேசம், தொல்புரம், சுழிபுரம்,நாவற்குழி, தச்சன் தோப்பு, மறவன்புலோ, கோகிலாகண்டி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)




# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் 10 பேர் யாழ். பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் பல்வேறு குற்றங்களைப் புரிந்ததுடன் நீதிமன்ற வழக்குகளுக்கு சமுகமளிக்காமல் தலைமறைவாகி இருந்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கைது செய்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட அனைவரும் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

# ஆடிவேல் விழா வீதியுலா நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தான வருடாந்த ஆடிவேல் விழா வீதியுலா நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளதாக தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. இவ்வீதியுலாவானது நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக முற்பகல் 11 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல்.2 மணிக்கு ஆரம்பமாகி யாழ். நகர் அனைத்து வீதியூடாக மாலை 6.30 மணிக்கு வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலைச் சென்றடையும்.

மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தை வந்தடையும். அங்கிருந்து பிற்பகல் 4 மணிக்கு புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை வந்தடையும்.


05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை நண்பகல் 12 மணிக்கு வந்தடையும். மாலை 4.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 7 மணிக்கு ஆலயத்தை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# மாலுசந்தி மை.வி.க. விளையாட்டு விழா

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழாவின் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்கு பற்றும் அணிக்கு 7 பேர் கொண்ட இன்றைய உதைபந்தாட்ட போட்டியில் பி.ப. 4 மணிக்கு சக்கோட்டை சென் சேவியர் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டியில் பி.ப. 5 மணிக்கு மானிப்பாய் றெட்றேஞ்சஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (அ-3-24)



யா/ உயரப்புலம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி [illegible] இளங்கோவன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குகளை அள்ளி வழங்கி தமிழர் ஒற்றுமையை எடுத்துக்காட்டுங்கள்

## செல்வம் எம்.பி.அழைப்பு

(கொழும்பு)

**எமது மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை நமது வாக்குப்பலத்தோடு சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாண தேர்தல் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எதிர்வரும் கிழக்கு மாகாண தேர்தலில் போட்டியிடுகின்றோம். கடந்த தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு போட்டியிடவீல்லை. அதனால் இலங்கை அரசாங்கம் ஒரு தமிழரை கொண்டு வந்து முதலமைச்சர் பதவியில் அமர்த்திவிட்டு எமது பூர்வீக நிலங்களையும் இராணுவத்தின் அடாவடித்தனங்களையும் ஆக்கிரமிப்பையும் மேற்கொண்டு எமது வரலாற்று சிறப்பு மிக்க பாரம்பரிய பூமிகளில் எமது அடையாளத்தையே இல்லாமல் செய்கின்ற நிலையை மேற்கொண்டுள்ளது என்பது எம் எல்லோருக்கும் தெரியும்.

அரசாங்கம் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள் அடிமைகளாக்கப்பட வேண்டும். எமது வரலாறுகள் சிதைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தனது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

எமது உரிமைகளை, எமது இறையாண்மையை வென்றெடுப்பதற்கும் எமது வாழ்வாதார பிரச்சினைகளை நாங்கள் வெளியுலகிற்கு எடுத்துக்கீாட்டுவதற்கும் எமது செயற்பாடுகளை போராட்டத்தின் ஊடாகவும் முன்னெடுத்து செல்வதற்கு எமக்கு அங்கீகரிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தேவை.

இன்று வடக்குகிழக்கில் பாரிய மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐ.நா.சபை கொண்டுவந்த இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் பிரச்சினைகள் தமிழ்மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை வெளியுலகிற்கு காட்டுகின்ற அடையாளமாக நாம் இத்தேர்தலை பார்க்கின்றோம்.

எமது மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை தமது வாக்கு பலத்தோடு சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டி இந்த அரசாங்கத்தின் முகத்திரையை கிழித்தெறியக்கூடிய வகையில் இந்த தேர்தலின் முடிவுகள் அமைய வேண்டும். இது சாத்தியப்பட வேண்டுமானால் நாம் கூடுதலான ஆசனங்களை பெற வேண்டும் என்பது எனது கணிப்பு. எமது மக்கள் கூடுதலான வாக்குகளை பதிவுசெய்ய வைக்க முடியும். அவ்வாறு கூடுதலான வாக்குகள் பதியப்பட்டால் எமக்கு நிச்சயம் கூடுதலான ஆசனங்கள் கிட்டும் என்றார். (அ-2)

# போக்குவரத்து நடைமுறை தொடர்பில் பொலிஸார் வீதிகள்தோறும் விளக்கம்

வவுனியா மாவட்டத்தில் வீதியொழுங்கு தொடர்பிலும் நகரினை சுத்தமாக வைத்திருப்பது தொடர்பாகவும் விழிப்புணர்வு கூட்டங்களை வவுனியா பொலிஸார் வீதியோரங்களில் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் மாலை வவுனியா குருமன்காட்டு சந்தியில் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட கடை உரிமையாளர்களுக்கான விளக்கமளிக்கும் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். அந்த வகையில் தலைக்கவசங்களை கையில் கொண்டு செல்வதும் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்துவதும் விபத்துக்களுக்கான வழிவகைகளாக அமைந்து விடுகின்றன.

வீதியை கடக்கும் போது வீதி கடவையினால் கடக்க வேண்டும். அவ்வாறு கடக்காதவர்களை நாம் மனித இனமாக பார்ப்பதில்லை. எனவே மனிதர்கள் சிறந்த முறையில் வீதியொழுங்குகளை பின்பற்ற வேண்டும்.

அதேபோல் தெற்கில் இருந்து வருபவர்கள் பல அழகிய கிராமங்களை கண்டு வடக்கின் வாசலான வவுனியாவிற்கு வரும்போது அதுவும் அழகாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் மனம் சோர்ந்து விடும். அது நல்லதாகவும் இருக்காது.

நாம் மக்களுக்கு பாதுகாப்பு தருவது போல் நகரையும் துப்புரவாக வைத்திருக்க உதவுவோம் என தெரிவித்தார். இதில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த அதிகாரி, தலைமைப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எரிக்பெரேரா ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)

# வவுனியாவில் ஔவையார் விழா

(புந்தோட்டம்)

வவுனியா தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் ***ஔவையார் விழா*** எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழருவி சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வவுனியா விபுலானந்தாக்கல்லூரி மாணவிகள் தமிழ்தாய் வாழ்த்தினையும் வாழ்த்துரையினை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் செயலாளர் க.தர்மதேவனும் ஆற்றவுள்ளனர்.

***கற்றது கை மண் அளவு*** என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள கோல உரையாடலில் ஔவையாராக திருமதி ம.காந்தராசாவும் ஒட்டக்கூத்தனாக கோ. தர்மபாலனும் புகழேந்தியாக சிவஸ்ரீ நா.பிரபாகரக் குருக்களும் ஒப்பனை செய்து வாதாடவுள்ளனர்.

இதேவேளை கலைதெரி அரங்கத்தில் ஔவையாரின் சமுதாய சிந்தனை தொடர்பில் கி.உதயகுமார், கல்விச்சிந்தனை தொடர்பில் ந.பார்த்தீபன், ஆன்மீக சிந்தனை தொடர்பில் திருமதி வி.முருகேசம்பிள்ளை, மருத்துவ சிந்தனை தொடர்பில் ச.க.தியாகலிங்கம், பெண்ணியம் தொடர்பில் திருமதி த.நிறைமதி ஆகியோர் கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர்.

இறுதி நிகழ்வாக நாட்டியக்கலை மாமணி திருமதி துஷ்யந்தி வேலுப்பிள்ளையின் பாரத சேஸ்திர மாணவிகள் வழங்கும் ***நல்ல தமிழ் காண்போம்*** நாட்டியமும் நடைபெறவுள்ளதாக தலைவர் அறிவித்துள்ளார். (அ-9-266)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

22

July 2012 to December 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

(அ-678)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2012



| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 1<br>உயரம்:-5'7"<br>கி.பா:-80.5, 8 இல் செவ், சூரி<br>தொழில்:- MBBS(S/L) டாக்டர்<br>B/199 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தராடம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா:-63, 1 இல் செவ்<br>தொழில்:- MBBS(S/L) டாக்டர்<br>G/033 |
| பிறப்பு:- 1973 இந்து<br>நட்சத்திரம்:-சித்திரை 3<br>உயரம்:-5'4"<br>கி.பா:-16.75<br>தொழில்:-பிரான்ஸ் (P.R)<br>B/219 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:-62, 8 இல் செவ்<br>தொழில்:-Software engineering<br>G/057 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-15, 2 இல் செவ்<br>தொழில்:-டுபாய் ரான்ஸ்போட் கம்பனி<br>B/214 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மிருகசீரிடம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:-36, 1 இல் சூரி, செவ்<br>தொழில்:- MSC Clinical Bio Chemistry<br>G/125 |
| பிறப்பு:- 1983 இந்து<br>நட்சத்திரம்:-உத்தராடம் 3<br>உயரம்:-5'3"<br>கி.பா:-13, 4 இல் சூரி, செவ்<br>தொழில்:-பைப் லைனிங்<br>B/075 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 1<br>உயரம்: 5'2"<br>கி.பா:-36, 4 இல் செவ்<br>தொழில்:-(BSC Hons விரிவுரையாளர்)<br>G/082 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற கட்டடம் கட்டுவது பற்றி ஆராய புதிய அதிகாரிகள் குழு

(புதுடில்லி)

நாடாளுமன்றத்துக்கு புதிய கட்டடம் கட்டுவது பற்றி ஆராய்வதற்கு சபாநாயகர் மீராகுமார் உயர் அதிகாரிகள் குழு ஒன்றை அமைக்கவுள்ளார்.

டில்லி நாடாளுமன்ற கட்டடம் 1927 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். 85 ஆண்டு கால பழைமை வாய்ந்த கட்டடம் பாரம்பரிய சின்னமாக திகழ்கின்றது. தற்போதைய நாடாளுமன்றத்துக்கு தீயணைப்பு துறையினரிடமிருந்து இன்னும் தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நாடாளுமன்றத்துக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்துக்கு மாற்றாக கட்டப்பட வேண்டிய புதிய கட்டடம் குறித்து நகர்ப்புற வளர்ச்சித் துறை பரிசீலித்து வருகிறது.

புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டுவதற்கு பிரதமர் மன்மோகன்சிங் மத்திய அமைச்சரவை அனுமதி அளிக்க வேண்டியுள்ளது.

முதலில் புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டும் திட்டம் பற்றி ஆராய்வதற்கு சபாநாயகர் மீராகுமார் உயர் அதிகாரக்குழு ஒன்றை அமைக்கவுள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி துணை ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. துணை ஜனாதிபதிதான் மாநிலங்களவையின் தலைவராகவும் இருப்பதால் புதிய துணை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டபின்னர் அவருடனும் ஆலோசனை நடத்தி உயர் அதிகாரக்குழுவை சபாநாயகர் மீராகுமார் அமைப்பார்.

### கூடுதல் இடவசதி

தற்போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சேர்த்து சுமார் 800 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, இரட்டை உறுப்பினர் தொகுதி போன்றவையெல்லாம் வருகிற போது உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய நாடாளுமன்றத்தை எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, கூடுதல் உறுப்பினர்கள் அமர்வதற்கு இடவசதி செய்யும் இருபத்தொராம் நூற்றாண்டின் தேவைகளை கருத்தில் கொண்டும் புதிய பாராளுமன்றம் வடிவமைத்துக் கட்ட வேண்டி இருக்கிறது.

இதுபற்றியெல்லாம் உயர்அதிகாரக்குழு அனைத்து வகையிலும் விரிவான ஆலோசனைகள் செய்த பின்னரே பாராளுமன்றத்துக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் இறுதி செய்யப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# மஹோற்சவம்

(சிலாபம்)

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாதர் சுவாமி வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 28 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தேர்த் திருவிழாவும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (அ-9)

# பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 2800 பேர் ஒரு மாதத்தில் கைது

(கொழும்பு)

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான ஒரு மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 28 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின்படி இத்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகமாக 7 ஆயிரத்து 103 பேர் மேல் மாகாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள நபர்களைத் தேடி தொடர்ச்சியாக நாடு முழுவதும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பாடசாலை நேரத்தில் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள அதிபர்களுக்கு தடை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

பாடசாலை நேரமான காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை தமது கடமைகளுடன் நேரடி தொடர்பில்லாத செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றுவதை கல்வி அமைச்சு தடைசெய்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை நேரத்தில் அதிபர்கள் அலுவலகத்தில் இல்லாதமை குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அதிபர்கள் இல்லாத நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அதை ஆராய எவருமில்லாத நிலை காணப்படுகின்றது. அதிபர்கள் சில வேளைகளில் தமக்கு பதிலாக எவரையும் நியமிக்காமல் கூட அமைச்சிலோ அல்லது வலயக்கல்வி அலுவலகங்களிலோ நேரத்தை விரயமாக்குகின்றனர். அவர்கள் கல்வி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பங்குபற்றுவதனால் தமக்கு பதிலாக கடமைகளை செய்வதற்கு எவரையும் நியமித்துவிட்டு அதில் பங்குபற்ற செல்லலாம்.

இது தொடர்பாக அகில இலங்கை செயற்பாட்டு அதிபர்கள் சங்கத்திடம் கருத்து கேட்டபோது இத்தகைய அறிவுறுத்தல்கள் நடைமுறை சாத்தியமானதல்ல என தெரிவித்தது. அதிபர்களுக்கு நிர்வாக கடமைகளுக்கு அப்பால் பல்வேறு பணிகள் உள்ளன எனவும் கூறியது. சிலவேளைகளில் பல்வேறு அறிக்கைகளை நேரடியாக ஒப்படைக்குமாறு அதிபர்களை வலய கல்வி அலுவலகங்கள் கோருகின்றன என அகில இலங்கை செயற்பாட்டு அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# ஹனோல் பள்ளத்தில் பேருந்து வீழ்ந்தது

## 18 பேர் பரிதாப உயிரிழப்பு

(டேராடூன்)

உத்தரகாண்ட் மாநிலம் ஹனோல் என்ற இடத்திலிருந்து விகாஸ்நகருக்கு 47 பயணிகளுடன் ஒரு பேருந்து வந்து கொண்டிருந்தது.

டேராடூன் அருகே உள்ள சக்ரட்டா என்ற இடத்தில் வந்தபோது பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் திடீரென கவிழ்ந்தது.

இந்த விபத்தில், 6 பெண்கள் ஒரு குழந்தை உட்பட 18 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினார்கள். 17 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை என்று மாவட்ட நீதிபதி ரவிநாத் ராமன் தெரிவித்தார். இந்த விபத்து பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று முதல்வர் விஜய் பகுகுணா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் பலத்த காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியது

## இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றச்சாட்டு

இராமேஸ்வரத்தில் இருந்து 600 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க சென்றனர். மீன்வளம் மிகுந்த கடல் பகுதியில் மின்பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது 5 போர் கப்பலில் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் துப்பாக்கியை காட்டி மிரட்டினர்.

பின்னர் அவர்கள் மீனவர்களின் படகுகள் மீது வெற்று மதுபான போத்தல்கள், இரும்பு துண்டுகள், கற்களை வீசி விரட்டியடித்தனர். மீனவர்கள் படகுகளில் பதுங்கி கொண்டதால் காயம் ஏதும் இல்லாமல் தப்பினர்.

இதனைத் தொடர்ந்து மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் கரை திரும்பினர். இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அட்டூழியம் செய்து வருவதால் இராமேஸ்வரம் மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர். (அ-2)



நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கான புதிய அலுவலகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈ.பி.டியின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அடிக்கல் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம்.

# ஹசாரே அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன்

## அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா

(பெங்களூர்)

அன்னா ஹசாரே அரசியலுக்கு வரும் முடிவை வரவேற்கிறேன் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கூட்டம் அரண்மனை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவதாக அன்னா ஹசாரே கூறியுள்ளார். அரசியலுக்கு வரும் அவரின் முடிவை வரவேற்கிறேன். அவரின் குறிக்கோள்களுக்கு அதுவே சிறந்த வழி.

சட்டப்பேரவைத் தேர்தலை சந்திக்க காங்கிரஸ் கட்சித் தயாராக உள்ளது. தேர்தலுக்கான கட்சியின் ஆயத்தப்பணிகளை மதிப்பீடு செய்து வருகிறோம். கர்நாடகத்தில் பா.ஜ.கவின் மோசமான ஆட்சியை சுமார் 8 மாதங்கள் வரை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

பா.ஜ.க. அரசு உலக முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் முதல்வர்கள் மாற்றம் நடக்கிறது. அமைச்சர்கள் சிறை சென்ற வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் எப்படி வெளிநாட்டினர் கர்நாடகத்தில் தொழில் துறையில் முதலீடு செய்வார்கள். இதை ஆளும் அரசும் அதன் தலைமையும் சிந்திக்க வேண்டும். கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சியை ஒழிக்கவும் நல்லாட்சி மலரவும் காங்கிரஸின் வெற்றியை உறுதிப்படுத்தவும் கட்சியினர் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் தாக்கப்படுவது குறித்து மத்தியரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## முன்னாள் முதலமைச்சர் உமாபாரதி வலியுறுத்து



(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை தாக்குவது குறித்து மத்திய அரசு கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண் டும் என மத்திய பிரதேச மாநில முன்னாள் முதல் அமைச்சர் உமாபாரதி வலியுறுத்தியுள்ளார். இராமேஸ்வரத்திற்கு வருகை தந்த அவர் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் கூறியவை வருமாறு,

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குவது கண்டனத்துக்குரியது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் ஒரு உயிரை பாதுகாக்கக்கூட பெரும் முயற்சிமேற்கொள்வார்கள். ஆனால், நமது நாட்டில் அதுபோன்ற நிலை இல்லை. அருகாமையில் உள்ள நாடுகளோடு உறவாக இருக்க வேண்டும்.

ஆனால், இரு நாடுகளும் சட்டத்தை மதிக்க வேண்டும். சட்டத்தை மீறி, ஒப்பந்தத்தை மீறி செயற்படும் நாடுகளுக்கு எச்சரிக்கை மட்டும் போதாது. இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை தாக்குவது குறித்து மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பறவைகள், மிருகங்கள், மீன்கள் கூட பாதுகாக்கக் கூடிய நிலை இருக்க மனிதர்களின் உயிர் பாது காக்கப்பட வேண்டும் என அவர் கூறினார். (2)

# குறைவருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிதியுதவி

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா வழங்கினார்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய குறைந்த வருமானம் பெறும் 50 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணிப்பதற்காக தலா இரண்டரை இலட்சம் ரூபா வீதம் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவினால் வழங்கப்பட்டன.

இம் மாவட்டத்தில் மீள்குடியேறிய குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் தங்களது வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அலுவலகத் தில் சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரோரா தலைமையில் நடைபெற்ற போது இவை வழங் கப்பட்டன.

அத்துடன் 70 வயதுக்கு மேற்ப ட்ட முதியவர்கள் ஆயிரத்து 400 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் மாதந்தோறும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதேவேளை, மாவட்டத்திலுள்ள அங்கவீனமுற்றோருக்கான மூக் குக் கண்ணாடிகள் மற்றும் சக்கர நாற்காலிகளும் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம், முல்லைத்தீவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பீ.மாரக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

# ரணிலுக்கு தன்மீது பயமாம் சரத் பொன்சேகா கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தமது பிரபல்யத்தை எண்ணி அச்சம் கொண்டிருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தன்னை ஒரு அரசியல்வாதியாக மதிக்கிறார். அதனால் நானும் அவரை மதிக்கிறேன். எனினும் அவர் என்மீது அச்சம் கொண்டவராக காணப்படுகிறார்.

ஆனால், அது என்மீதுள்ள அச்சம் இல்லை. எனது புகழ் மீது உள்ள அச்சம். இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் பதவி வழங்கப்படுவதாக கூறி சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக்கட்சி அழைத்ததாக வெளியான செய்தியில் உண்மை இல்லை.

ஐக்கிய தேசியக்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது கட்சியின் 20 ரூபாய் சீட்டினை மாத்திரம் பெற்றுக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரியதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)




★ 1610-ஹென்றி ஹட்சன் தனது கடற் பயணத்தின் போது இன்றைய ஹட்சன் குடாவை அடைந்தார்.

★ 1790- ஐக்கிய மெரிக்காவில் முதற் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.

★ 1798- பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.

★ 1870-உலகின் முதலாவது சுரங்க தொடரூந்து சேவை லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1903-ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக மசிடோனியர்களின் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது.

★ 1914-ஜேர்மனியப் படையினர் லக்சம்பேர்க்கை முற்றுகையிட்டனர்.

★ 1916-முதலாம் உலகப் போர்: லியனார்டோ டாவின்சி என்ற இத்தாலியப் போர்க்கப்பல் அவுஸ்திரேலியாவினால் மூழ்கடிக்கப்பட்டது.

★ 1918-முதலாம் உலகப் போரை அடுத்து சைபீரியாவுக்கு தனது படைகளை அனுப்பப் போவதாக ஜப்பான் அறிவித்தது.

★ 1931-இராணுவ வேலைகளை நிராகரிக்குமாறு அறிவியலாளர்களுக்கு ஐன்ஸ்டைன் அழைப்பு விடுத்தார்.

★ 1932-பொசித்திரன் (இலத்திரனின் எதிர்த்துணிக்கை) கார்ல் ஆண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1934-அடொல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியின் ஜனாதிபதியானார்.

★ 1939-அணு ஆயுதத்தை தயாரிக்க அறிவுறுத்துமாறு ஐன்ஸ்டைன், லியோசிலாட் ஆகியோர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூட்ஸ்வெல்ட்டிற்குக் கடிதம் எழுதினார்கள்.

★ 1943-போலந்தில் திரெபிளிங்கா வதை முகாமில் நாசிகளுக்கு எதிராக கிளர்ச்சி இடம்பெற்றது.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.

★ 1968- பிலிப்பைன்சில் கசிபுரான் என்ற இடத்தில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர்.

★ 1973-மான் தீவில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றில் இடம் பெற்ற தீ விபத்தில் 51 பேர் உயிரிழந்தனர்.

★ 1980-இத்தாலிய தொடரூந்து நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 85 பேர் உயிரிழந்தனர்.

★ 1989-யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

★ 1990-ஈராக் குவைத்தின் மீது படை எடுத்தது.

### பிறப்பு

★ 1926-ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர் (இ.2008)


### இறப்புக்கள்

★ 1860-சேர் ஹென்றிவோர்ட், இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநர் (பி.1796)

★ 1892-டாக்டர் பொன்ஜீன், கொழும்பின் முதலாவது ஆயர்

★ 1922-அலெக்சாண்டர் கிரஹம்பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். (பி.1847)

★ 1923- வோரன் ஹார்டிங், ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது ஜனாதிபதி (பி.1865)



★ 1913-உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவிய தனிநாயகம் அடிகளாரின் பிறந்த தினம் இன்றாகும். (இ.1980)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் பத்தாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் சோலை மலையில் நின்ற பெருமான் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை சைவப்புலவர் நித்தியதசிதரன் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சித்தன்கேணி சிவசக்தி அறநெறிப் பாடசாலை , மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை, வேலணை ஐயனார் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் விசேட நிகழ்வாக கலாவித்தகர் விதுக்ஷா கோபிநாத்தின் வீணைக்கச்சேரி நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை வயலின் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வயலின் ஆர்.இராதாகிருஷ்ணன்,திருமதி சைந்தவி நிஸாகரன், மிருதங்கம் எஸ்.துரைராஜா, கெஞ்சிரா பிரம்மஸ்ரீ என். சிவசுந்தரசர்மா, தபேலா சதா வேல்மாறன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தாம் நாளாகிய இன்று வியாழக்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் பார்வதி தவம் எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# தமிழர் பிரச்சினை குறித்து பேச டெசோ மாநாடு நல்ல சந்தர்ப்பம்

## கலந்து கொள்வேன் என்கிறார் விக்கிரமபாகு

தமிழீழ ஆதரவாளர்கள் மாநாட்டில் கலந்து இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் குறித்து பேசுவதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி தாம் கலந்து கொள்ளப்போவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி தலைமையில் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தமிழர்களின் பிரச்சினை குறித்து பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் விக்ரமபாகு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை வழங்குவதை தாமதப்படுத்தாமல் அவற்றை துரிதமாக வழங்குமாறு வலியுறுத்தி டெசோ மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படும்.

இந்த மாநாட்டில் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மறந்து போயுள்ளது பற்றியும் பேசப்படும். அத்துடன் நாட்டில் தமிழ் மக்களுக்கு நேரும் அநீதிகளை நிறுத்தவும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துமாறு சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழக மக்களை கோரவுள்ளோம்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை இந்த மாநாட்டின் மூலம் பெற்றுக்கொடுக்க முயற்சிப்போம் என்றார். தனது தமிழக விஜயத்தின் போது அந்த மாநிலத்தின் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களை சந்தித்து இந்த கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# வவு.நகரசபை மின் விளக்குகள் உறுப்பினர்களிடம் பகிர்ந்தளிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபைக்குட்பட்ட வீதிகளில் மின்விளக்குகள் இன்மையால் பல விபத்துக்கள் இரவு வேளைகளில் இடம்பெறுவதாக பல தரப்பாலும் நக்ரசபைக்கு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதற்கிணங்க நகரசபையினால் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் 500 மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டு வீதிகளில் பொருத்தப்படாமல் நகரசபை களஞ்சியசாலைகளில் தேங்கி கிடந்த நிலையில் நகரசபை உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்களின் பொறுப்பில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனினும் சில உறுப்பினர்கள் இது நகரசபை உடைமை என்ற காரணத்தாலும் மின் விளக்குகளை பொருத்துவதற்குரிய போதுமான உபகரணங்கள் இல்லாத நிலையிலும் அவற்றை தாம் பொறுப்பேற்க முடியாது என கூறி பகிரப்பட்ட மின் விளக்குகளை நகரசபையில் இருந்து எடுத்துச் செல்ல மறுத்திருந்தனர்.

மின்விளக்குகள் பகிரப்பட்ட விடயம் தொடர்பில் நகரசபை உறுப்பினர் எஸ்.ரீ.இராஜேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பிலும் பழுதடைந்த நிலையில் உள்ள வாகனங்கள், பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியிருந்தோம்.

அந்த வகையில் 500 மின் விளக்குகள் கடந்த 5 மாத காலமாக களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஏற்கனவே 100 மின்குமிழ்கள் மத்திய பேருந்து நிலையத்திற்கும் பூந்தோட்டம் மயானத்திற்கும் பொருத்தப்பட்டதாக நகரசபையின் செயலாளரது அறிக்கையில் தரப்பட்டிருந்ததன் அடிப்படையில் தற்போது எஞ்சியுள்ள 400 மின் விளக்குகளையும் உடனடியாக உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டி ஏற்பட்டதன் காரணமாக தலைவரின் மேற்பார்வையின் கீழ் 10 உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

தற்போது அவை உறுப்பினர்களின் வீடுகளில் வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான உதிரிப்பாகங்கள் முழுமையாக இல்லாத காரணத்தால் அடுத்துவரும் சபைக்கூட்டத்திற்கு இடையில் உதிரிப்பாகங்கள் கிடைக்கப்பெற்றதும் ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது வட்டாரத்திற்கு எங்கெங்கு மின் விளக்குகள் சென்றடைய வேண்டுமென இனம் காணப்பட்டு அங்கு பொருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.(அ-9-266)

## பன்றி பாய்ந்ததில் படுகாயம்

(கனகபுரம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர் மீது பன்றி பாய்ந்ததில் படுகாயமடைந்த ஆசிரியர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு உமையாள் புரத்தில் இடம்பெற்றுள்ளது.


சம்பவம் குறித்து தெரியவருவது,

முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த நபர் மீது குறுக்கே வந்த பன்றி பாய்ந்ததில் குறித்த நபர் கை முறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த இளங்குமரன் (வயது 35) என்ற மு/அலம்பில் மகா வித்தியாலய ஆசிரியரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (அ-9-259)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று மஞ்சத் திருவிழா



### எழுந்தருளும் காட்சியின் மாட்சிதான் என்னே நல்லைக்கந்தா

சங்கரன் நெற்றிக்கண் சுடரொளியே
சர்வவல்லமையுடன் சூரனை அழித்த தீரனே
வரலாற்றுப் பெருமைமிக்க நல்லையில் அமர்ந்தவனே
வளமோடு வீற்றிருக்கும் அலங்காரக் கந்தனே
வேலுண்டு பயமில்லை எனும் வல்ல வடிவேலனே
வெற்றி சேவற் கொடியுடைய வேந்தனே
மூவுலகும் காணாத மஞ்சத்தில் குஞ்சரி வள்ளி சமேதராய்
எழுந்தருளும் காட்சியின் மாட்சிதான் என்னே! நல்லைக்கந்தா

*செ.தர்மகுலசிங்கம், நாயன்மார்க்கட்டு.*

### நல்லைக்குமரன் மஞ்சரதமேறி வருகிறான்

சங்கார வேலேந்தி தாளமணி நடையொடு
மஞ்சரத பவனி வருக
அகிலாண்ட நாதனே ஆறுமுக ராஜனே
மஞ்சரத பவனி வருக
அன்பரின் தோழனே அடியாரைக் காத்தருள
மஞ்சரத பவனி வருக
துன்பம் துடைத்தருள சுந்தரிகளிருவரொடும்
மஞ்சரத பவனி வருக

*க.லோகேஸ்வரன்,தொல்புரத்தூர்.*

### தக்கவழி காட்டிடையா!



கொஞ்சிக் குலாவி நிதம்
குவலயத்தையே சுமந்து
விஞ்சு அரு ளீயும்
வீரத் திரு முருகா!
மஞ்சத்திலே யூர்ந்து
மாட்சியுடன் ஆட்சி செய்து
தஞ்சம் அடைந் தோர்க்குத்
தக்க வழி காட்டிடையா!

*வி.சி.குஞ்சிதபாதம், கூத்தாடி.*

### மஞ்சத்தில் நீ அமர்ந்தாய் முத்துக்குமரனே

பத்தாம் திருவிழா மஞ்சமதில் நீ அமர்ந்து
காட்சி தந்தாய் எழில் குமரனே
உன் அழகென்ன ஒளியென்ன கண்கொள்ளா வடிவம்
பக்தர்கள் புடை சூழ பவனியிலே நீ வருகையிலே
பாதித் துன்பங்கள் பறந்தோடுதையா வேலையா
பாரினிலே நல்லூரான் புகழைப் பாடாதவர்கள்
இல்லை ஐயா வேலையா குமரையா கந்தையா
கடம்பனே உன் அருட்கடாச்சம்
கவலையைத் தீர்க்குமையா

*எஸ்.பவானி, திருநெல்வேலி.*

### தேன்தமிழ் தெய்வமே கந்தா!



நான்முகன் அறியா
பிரணவ பொருளை
ஐம்முக சிவனுக்கு
குருவாகி போதித்த
ஆறுமுக நாதனே!
சித்திர வேலவா!
ஓங்கார ரூபனாய்
வியாபித்த உன்னிடம்
ஏழேழு ஜென்மமும்
எம்மோடு நீ வேண்டும்
நல்லூரில் வந்துதித்து
நன்மைகள் புரிந்திட வா!
என நம்பி அழைக்கின்றோம்
ஓடி வாருமைய்யா!!!

*க.சபேஷ்.*

சுந்தர்சன்
இலத்திரனியல் சாதனங்களை இறக்குமதி
செய்பவர்களும் விநியோகத்தர்களும்
யாழ் வீதி, மானிப்பாய்
T.P/Fax:-021 225 5136
sundhars@yahoo.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 206



சோவியத் நாட்டின் ஸ்தாபகர் லெனினின் நினைவுச்சிலை

### சோவியத் இராணுவத்தின் விடுதலைப் பணி

...ஐரோப்பிய நாடுகளில் நிலவிய எதிர்ப்புச் சக்திகளுடன் சோவியத் இராணுவத்திற்கு இருந்த போராட்ட ஒத்துழைப்பு, வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை அடைவதற்கான முக்கியக் காரணியாக விளங்கியது. எதிர்ப்பு இயக்கம் 1944 ஆம் ஆண்டு, சோதர கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்க பல சோவியத் கெரில்லாப்படை யூனிட்டுக்கள் தமது போர் நடவடிக்கைகளைத் தாய் நாட்டிற்கு வெளியே எடுத்துச் சென்றபோது மிக உயர்ந்த கட்டத்தை அடைந்தது. உதாரணமாக 1944 வசந்த காலத்தில் போலந்தில் 10 க்கும் மேற்பட்ட சோவியத் கெரில்லாப் படை யூனிட்டுகளும் அணிகளும் இயங்கின. 10 சோவியத் கெரில்லாப் படையூனிட்டுகளும் அணிகளும் ஸ்லொவாக்கிய தேசிய எழுச்சிக்கு உதவி புரிவதற்காக வந்தன. அத்தோடுகூட செக்கோஸ்லொவாக்கியா, போலந்து ருமேனியா, மற்ற நாடுகளுக்கு அனுபவம் மிக்க கெரில்லாப் படைவீரர்களடங்கிய ஸ்தாபன அமைப்பு குழுக்களும் அணிகளும் அனுப்பப்பட்டன. இவை இந்நாடுகளில் தேசிய கெரில்லாப் படை இயக்கம் வளர உதவின.

ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்திற்கு சோவியத் யூனியன்



வீரஞ்செறிந்த, தியாகம் நிறைந்த செம்படை வீரர், வீராங்கனைகளை நினைவு கூரும் சிலை

வழங்கிய உதவிக்கு பெரும் இராணுவ, தார்மீக முக்கியத்துவம் இருந்தது. சோவியத் துருப்புகளின் வெற்றியோடுகூட இது இலட்சோப இலட்சம் சாதாரண மக்கள் பாசிசத்திற்கு எதிராக நடத்திய போராட்டத்தை ஊக்கிவித்தது, வெற்றியின் மீதான நம்பிக்கையையும் பலத்தையும் அவர்களுக்கு ஊட்டியது.

பாசிச எதிர்ப்பு சக்திகளுக்குக் கணிசமான உதவியளித்த சோவியத் யூனியனுக்கு மாறாக அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்கள் விடுதலை இயக்கத்தின் அளவை குறைக்க முயன்றன. இவை தேசபக்தர்களுக்கு சென்ற ஆயுத சப்ளைகளைக் குறைத்தன, இவர்களின் நடவடிக்கைகளை தம் நலன்களுக்கு உட்படுத்த முயன்றன. பின்வரும் சம்பவம் ஜெனரல் டாஸ்டியேவுடன் நடத்திய உரையாடலின் போது, பிரெஞ்சு நாட்டவர் தாம் பெறும் ஆயுதங்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் ஜெனரல் ஐசன் ஹோவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்கள் என்றும் அவர் உத்தரவாதம் தர முடியுமா என்று கேட்டார். 1944 டிசம்பர் இத்தாலியிலிருந்த நேச நாட்டுத் துருப்புகளின் தளபதி பீல்ட்மார்ஷல் அலெக்சாந்தர் கெரில்லாப் படையைக் கலைக்க முற்பட்



உலக சமாதானத்தைப் பாதுகாத்த செம்படை வீரர்களின் நினைவுச்சிலை

## யுத்தத்தின் முடிவுகளும் யுத்தம் கற்பித்த பாடங்களும்

டார். அதே மாதம் பிரிட்டிஷ் துருப்புகள் சர்ச்சிலின் கட்டளைக்கேற்ப கிரீஸ் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டு முடியாட்சி- பாசிசப் பிற்போக்கிற்கு ஆதரவான நிலையை மேற்கொண்டன.

இராணுவ வெறிகொண்ட ஜப்பானால் அடிமைப்படுத்தப்பட்ட ஆசிய மக்களின், முதலாவதாக சீன மக்களின் விடயத்திலும் சோவியத் இராணுவம் தன் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றியது. ஜப்பானிய இராணுவ வெறி முறியடிக்கப்பட்டதானது, அசியாவில் ஜப்பானிய இராணுவ வெறி முறியடிக்கப்பட்டதானது, ஆசியாவின் மக்களை அயல்நாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்ததோடுகூட, ஜப்பானிய மக்களுக்கும் இராணுவ பாசிச சர்வாதிகாரத்திலிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தது.

ஏகாதிபத்திய ஜப்பனை முறியடித்ததிலும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தமக்கு விடுதலையைப் பெற்றுத் தந்ததிலும் சோவியத் யூனியன் மற்றும் சோவியத் இராணுவம் ஆற்றிய பெரும் பங்கை கிழக்கு, தென் கிழக்கு ஆசிய மக்கள் போற்றுகின்றனர்: கொரிய மக்கள் ஜனநாயக குடியரசின் தலைநகரமாகிய பியென்யானின் மத்தியில் மொரன் போன் மலையில் உள்ள மாபொரும் நினைவுச் சின்னத்தில் பின்வரும் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. "கொரிய மக்களை ஜப்பானிய அடிமைத்தளையிலிருந்து விடுவித்து கொரியாவின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் வழிகோலிய வீரஞ்செறிந்த சோவியத் இராணுவத்திற்கு மங்காப் புகழ் உண்டாகட்டும்".




ஜேர்மனியப் பாசிசத்தை உலகிலிருந்து வெளியேற்றிய வீரப்பெருமகன் ஜோசப்.ஸ்டாலின்

சோவியத் யூனியனின் விடுதலைப் பணியின் வரலாற்று முக்கியத்துவம் விடுவிக்கப்பட்ட அரசுகளின் எல்லைகளோடு நின்று விடுவில்லை. ஏற்கனவே கூறப்பட்டபடி சோவியத் இராணுவத்தின் வெற் றிகள் சர்வதேச நிலவரம் முழுவதையும் சமாதான, சோஷலிச சக்திகளுக்கு ஆதரவாக மாற்றின. இவ்வெற்றிகள் பல் ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றி பெறுவதற்கு அனுகூலமான வெளிச் சூழ்நிலை களைத் தோற்றுவிக்க உதவின, காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கம் வளர்ச்சியுற வழிகோலின.

இவ்வாறாக உலகின் முதல் சோஷலிச அரசின் விடுதலைப் பணி, சோவியத் நாட்டின் ஸ்தாபகரான வி.இ. லெனினின் வார்த்தை கலைக் கண்கூடாக மெய்ப்பித்தது. அவர் கூறினார்: "நாம் எதற்கும் எவருக்கும் துரோகம் செய்யவில்லை, எந்த ஒரு பொய்யையும் புனிதமாக்கவில்லை, மூடி மறைக் கவில்லை, துயரில் சிக்கிய எந்த நண்பனுக்கும் நமது சக்தி அனைத்தையும் பயன்படுத்தி இயன்ற எல்லா வழிகளிலும் உதவி புரிய நாம் மறுக்கவில்லை"

இந்தியாவுடன் நட்புறவை வளர்க்க வேண்டும் என்ற லெனினிய ஆணையை நிறைவேற்றும் முகமாக சோவியத் மக்கள் இந்திய தேசிய விடுதலை இயக்கத்திற்குச் சகல விதங்களிலும் ஆதரவு நல்கி னர். இந்தியர்கள் தம் பங்கிற்கு சோவியத் நாட்டின் பால் இடையறா நட்பையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி வந்தனர். உதாரண மாக 1943 ஆம் ஆண்டு பாதிக்கப் பட்ட ஸ்டாலின் கிராட்நகரத்துக்கு இந்திய உழைப்பாளிகளால் நெய்யப் பட்ட கூடாரத் துணிகள், கல்கத் தாவிலிருந்து வந்ததான, நெஞ்சை நெகிழச் செய்யும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

1981 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதி, இந்திய- சோவியத் கலாச்சாரக் கழகம், "சோவியத் மக்களுக்கு, குறிப்பாக ஸ்டாலின் கிராட் நகரத்தின் பாதுகாவலர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளதை என்றென்றும் மறக்க மாட்டோம். இவர்கள் ஈடுஇணையற்ற தம் வீரத்தாலும் தியாகத்தாலும் பாசிசத் துருப்புகள்



ஜேர்மனியப் பாசிசத்தை உலகிலிருந்து வெளியேற்றிய வீரப்பெருமகன், ஸ்டாலின் பூங்காவில் சிறுவர்கள் கொடியேந்திய நினைவுச் சிலை

பின் திரும்புமாறு நிர்ப்பந்தித்து, எங்களுடைய புனிதப் பூமியில் ஜப்பானிய ஏகாதிபத்தியச் சக்திகளுடன் இணைவதற்கு ஹிட்லர் தீட்டியிருந்த திட்டங்களைக் குலைத்தனர்" என்று நன்றி பாராட்டியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத பிரச்சினையா?

# மீனவர்களின் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியில் அப்பகுதி மீனவர்கள் பாதிப்படைவதாக வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உபதலைவர் கே.சிவசாமி தெரிவித்துள்ளார்.

குறித்த கடற்பரப்பில் சிறு மீன்பிடித் தொழிலாளர்களே அதிகமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்களால் இம் மீனவர்கள் பாதிப்படைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அன்றாட வருமானத்தை ஈட்டுவதற்காக இம் மீனவர்கள் இத் தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் தென்பகுதி மீனவர்களின் நடவடிக்கையால் இப்பகுதி கடல்வளம் அள்ளிச்செல்லப்படுகிறது. இதனால் இம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. நாளாந்தம் 5 தொடக்கம் 10 படகுகளுடன் இக் கடற்பகுதிக்குள் வரும் தென்னிலங்கை மீனவர்கள் எமது கடல்வளத்தினை எமது அனுமதியின்றி அள்ளிச் செல்வதாக அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இச்செயற்பாடுகள் மூலம் அக்கடற்பரப்பிலுள்ள அதிகளவான கடல் அட்டைகள் வேட்டையாடிச் செல்லப்படுகிறது. இதனால் கடல் அட்டைகள் அழிவடைந்து வருகின்றன.

இங்கு வரும் தென்னிலங்கை மீனவர்கள் சிலரின் ஆதரவுடனும் அனுமதியுடனும் வருகை தருவதனால் எம்மால் எதுவும் செய்ய முடியாத கையாலாகாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ் அத்துமீறல்கள் தொடர்பாக பல தடவைகள் இங்குள்ள திணைக்களங்களிடமும் தலைமை சமாசத்திடமும் அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடித் தொழில் வருமானத்தை நம்பி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் உள்ளதாகவும் அவர்களின் வருமானத்தை நாசம் செய்யும் உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலை இல்லாது செய்யுமாறு கோரப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.எமிலியாம்பிள்ளையிடம் கேட்டபோது அனைத்து தரப்பினரிடமும் வடபகுதி கடற்பரப்பில் இந்திய, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது என்ற வழமையான பதிலே கிடைத்தது. (அ-4)


## அரசாங்கத்தில் ஒழுக்கம் என்று ஒன்றில்லை

### திருவாய் மலர்ந்தார் சம்பிக்க

அரசாங்கத்திடம் திட்டமிட்ட பொருளாதார கொள்கை இல்லாததன் காரணமாக ஆசியாவின் அதிசயம் எவ்வாறு இருந்தாலும் அரசாங்கத்தின் இருப்பைக்கூட உறுதிப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், அரசாங்கத்தில் ஒழுக்கம் என்று ஒன்றில்லை எனவும் பொருளாதாரம் தொடர்பாக உரிய திட்டங்கள் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக ஆசியா அதிசயமாக மாத்திரமல்ல அரசாங்கத்தின் இருப்பைக் கூட தக்க வைக்க முடியாது என்றார். (அ-2)

## இராஜதந்திரக்குழு அவசரமாக வருகிறது



(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் தலைமையிலான உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவொன்று அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரொபேர்ட் ஓ பிளேக்குடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மூத்த அதிகாரிகள் சிலரும் இந்த உயர்மட்டக் குழுவில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஏற்பாட்டிலேயே இந்த அவசரப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தரவுள்ள இக்குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட்ட பலருடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என தெரியவருகிறது.

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையிலும் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையிலும் அமெரிக்காவின் இந்த உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு வருகை தருகின்றமை குறித்து பரபரப்பாக பேசப்படுகிறது.

மேலும் இந்தக் குழுவினர் வடக்குக்கும் பயணம் மேற்கொண்டு மீள்குடியமர்ந்த மக்களின் நிலையையும் நேரில் கண்டறியவுள்ளதாக தெரியவருகிறது. (அ-2)

## வடக்கு தேர்தலுக்கு முன்னர் மீள்குடியமர்வு நிறைவு பெறும்

### அடித்துக் கூறுகிறார் அமைச்சர் பசில்

(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னதாக இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் மீள்குடியேற்றம் செய்யப்படுவர் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளினால் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து துரத்தியடிக்கப்பட்டனர். அவர்களும் இந்த காலத்துக்குள் வடக்கில் குடியேற்றம் செய்யப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கில் முன்னதாகவே குடியேறாதிருந்த சிங்கள மக்கள் யாரையும் அங்கு புதிதாக குடியேற்றப்போவதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மாறாக இவ்வாறு புதிய குடியேற்றங்கள் இடம்பெறுகின்றதாக வெளியாகிய செய்திகளுக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். (அ-2)

## சர்வதேசத்திற்கான வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை

### சர்வதேசம் தொடர்ந்து வேடிக்கை பார்க்காது என்றார் சம்பந்தன்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் அஞ்சவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை எட்டுவது தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயங்கவில்லை என கட்சியின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகள் சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்கிலான பேச்சுவார்த்தைகளாக இருக்கக்கூடாது. பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்ட நாம் தயாராக இருக்கின்றோம்.

பேச்சுவார்த்தையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான தகவல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கம் இவற்றுக்கு பதிலளிக்கவில்லை.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமியான வடக்குக் கிழக்கை இணைத்து அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும். நாம் தனிநாட்டு கோரிக்கையை முன்வைக்கவில்லை. அதனை சர்வதேசமும் அனுமதிக்கவில்லை.

எனினும் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதனை கூற முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேச சமூகத்தினால் பேசப்படும் பிரச்சினையாக மாறியுள்ளது.

அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான ஓர் சூழ்நிலையில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. அரசாங்கத்தின் ஏமாற்று அணுகுமுறைகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது என சம்பந்தன் தெரிவித்துளார். (அ-2)

## இந்தோ. இளைஞன் படகில் உயிரிழப்பு

தாய்வானில் இருந்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பல் ஒன்றில் பணியாற்றிய இந்தோனேசிய இளைஞர் ஒருவர் திடீர் மரணமடைந்துள்ளார். இந்து சமுத்திரத்தின் ஆழ்கடல் பகுதியில் வைத்து கடந்த 25 ஆம் திகதியன்று இளைஞர் உயிரிழந்துள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த குறித்த கப்பலின் ஊழியர்கள் கூறியுள்ளனர்.


உயிரிழந்த டெரியன்டோ எனப்படும் 27வயதுடைய இந்தோனேசிய இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது சுகயீனம் காரணமாக உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சடலத்தை இந்தோனேசியாவில் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க இலங்கை நிறுவனம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## மழலை கலையமுதம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் மழலைப்பூங்கா முன்பள்ளியில் மழலைக் கலையமுதம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிறுவன 40 ஆம் ஆண்டு நிறைவு அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன அதிபர். த.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, கௌரவ விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவை சங்க துணைத்தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து மழலைப் பூங்கா மழலைகளின் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும். (அ-9)





நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தை நெறிக்கோவை அடுத்த வாரம் வெளிவரும்

## தேர்தல் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் கட்சிகள், பொலிஸ், ஊடகங்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கான நடத்தை நெறிக்கோவை ஒன்றை அடுத்தவாரம் முற்பகுதியில் தேர்தல் திணைக்களம் வெளியிடவுள்ளது.

இந்தக் கோவை சரியாக பின்பற்றப்படுகின்றதா என உறுதிப்படுத்துவதில் பிரச்சினை உள்ளது. இது சட்டவலு கொண்டதல்ல. எனவே, இவ்விதிகள் மீறப்படும்போது நடவடிக்கை எடுக்க முடியாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

எனினும் சுதந்திரமான நீதியான தேர்தலை நடத்துவதற்கு இந்த கோவை ஓரளவு உதவலாம்.

இந்த நடத்தை நெறிக்கோவைக்கு முன்மொழிவுகளை வழங்கும்படி மூன்று வாரங்களுக்கு முன்னர் கோரப்பட்டது.

ஒரு கண்காணிப்பாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் பக்கசார்பின்றி நடப்பதற்கு நாம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் பற்றியும் தேர்தல் திணைக்களத்துக்கு கூறியுள்ளோம்.

இதேவேளை, சகல தரப்பையும் ஒரேவிதமாக நடத்தும் சுதந்திரமான, நீதியான தேர்தலை நடத்த உதவும் நடத்தை நெறிக்கோவையை தாம் ஏற்றுக்கொள்வதாக மற்றொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது. (அ-2)

# தனியார் மருந்தகங்களில் மருந்துகள் விற்பனைக்கு சுகாதார அமைச்சு தடை

(கொழும்பு)

கொரொக்ஸ் மற்றும் ட்ரமடோல் ஆகிய இரு மருந்து பொருட்களையும் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இச்சுற்றறிக்கைக்கு அமைய இவ்விரு மருந்துப் பொருட்களும் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படுவது விரைவில் தடை செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தடை நடைமுறைக்கு வந்ததும் அரச ஒசுசல கிளைகளில் மாத்திரமே இவ்விரு மருந்துப் பொருட்களையும் விற்பனை செய்ய அனுமதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சில வலி நிவாரண மருந்துப் பொருட்களை சிலர் போதைக்காகப் பயன்படுத்துவதை கருத்தில் கொண்டே முதலில் இவ்விரு மருந்து பொருட்களையும் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்வதை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி கூறினார். (அ-2)

# வடக்கில் வாகன புகை பரிசோதனை ஆரம்பம்

## மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

வடமாகாணத்தில் வாகன புகை பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது.


கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த நிலைமையினால் வட மாகாணத்தில் வாகன புகை பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாமல் போனதாக மோட்டார் வாகன ஆணையாளர் எஸ்.எச்.ஹரஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

வாகன புகை பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நிலையங்களை ஸ்தாபிப்பதற்கான இடங்களை தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் கூறினார்.

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 318 வாகன புகை பரிசோதனை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. (அ-2)

# ராஜீவ்காந்தி கொலை குற்றவாளிகளின் கருணை மனு நிராகரிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் வலியுறுத்துவேன் என்கிறார் இளங்கோவன்



(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்குடன் தொடர்புடைய குற்றவாளிகளின் கருணை மனுக்களை நிராகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதியை வலியுறுத்தவுள்ளதாக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளான 3 பேரையும் தூக்கிலிட தடை விதிக்க வேண்டும் என்று தமிழகம் முழுவதும் போராட்டம் நடைபெற்றது.

மேலும் 3 பேரின் சார்பாக ஜனாதிபதியிடம் கருணை மனு அளிக்கப்பட்டது. இந்த கருணை மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு குழுவினரும் அந்த கருணை மனுவை நிராகரிக்க வேண்டும் என்று ஒரு குழுவினரும் தமிழகத்தில் போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த காங்கிரஸ் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ராஜீவ்காந்தி கொலை குற்றவாளிகளை தூக்கில் போட வேண்டும் என்று ஜனாதிபதியை வலியுறுத்த போவதாக தெரிவித்தார்.

அத்துடன் ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் கருணை மனுவை நிராகரிக்க வேண்டும் என்றும் அவர்களை தூக்கில் போட வேண்டும் என்றும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் வலியுறுத்தவுள்ளோம் என்றார். (அ-2)

# நீதிமன்ற தாக்குதல் சம்பவம்; 13 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட 13 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் ஏ.ஜூட்சன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

குறித்த 13 பேரையும் இம் மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் முன்னர் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்திற்கு இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டபோது ஓகஸ்ட் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மன்னார் நீதிமன்ற பகுதியில் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் விசேட பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# உயர்கல்வி அமைச்சு உயர்கல்வி தொடர்பில் தெளிவற்ற நிலை

## பல்கலை.விரிவுரையாளர் சங்கங்களின் சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் நாட்டின் உயர்கல்வி துறை தொடர்பிலான முக்கியத்துவம் குறித்து தெளிவற்ற நிலை இருப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமது பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கோ கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பிற்கு கிடைத்த தீர்வு என்னவென்று செய்தியாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்வியொன்றிற்கே இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், அமைச்சரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். தீர்வுகள் கிடைக்காத நிலைமையே அவரின் கருத்துகளில் நிலவுகின்றது.

நாட்டின் உயர்கல்வியமைச்சர் என்ற வகையில் அவர் தெரிவிக்கும் விடயங்கள் உயர்கல்வித்துறையை சார்ந்த எங்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் அவதானிக்க வேண்டிய காரணங்களாக இருக்கின்றன.

அதேபோன்று இலங்கை அரசாங்கத்திற்கும் உயர்கல்வி தொடர்பில் எந்தவித முக்கியத்துவமும் இல்லை என்பதே புலப்படுகிறது. தீவிரமாக இந்த பிரச்சினையை ஆராய்வதை விடுத்து அசமந்த போக்குடன் செயற்படுகிறார்கள்.

இந்த போராட்டத்தை நடத்தி நாங்களே வேண்டாவெறுப்புடன் அதனை கைவிட்டு விடுவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். ஆனால், நாங்கள் அதனை அவ்வளவு இலகுவாக கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளன தலைவர் குறிப்பிட்டார். (அ-2)



யாழ்.முகாமையாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்த **இன்றைய காலத்தில் விட்டுக்கொடுப்பின் அவசியம்** தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களான இலங்கை சட்டவரைவாளர் திணைக்கள ஓய்வு பெற்ற மேலதிக சட்டவரைபாளர் சிறியாங்கனி பெர்னான்டோ, கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் என்.செல்வக்குமாரன், வடமாகாண சபை இயக்குநர் சி.கிருஸ்னானந்தன், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்ன, பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை வாழ்நாள் பேராசிரியர் வை.ரஞ்சித் அமரசிங்க ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் முகத்திரை கிழிக்கப்பட்டு அது வெட்கித் தலைகுனிந்த அந்த நாட்கள்

**IPKF ஆக்கிரமிப்பு**

1987 ஜுலை 29 இல் ராஜீவ்- ஜே.ஆர் இற்கிடையில் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னணியில், ஈழத் தமிழரின் ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலைப் போராட்டம் சிதைக்கப்படுவதற்கான வலை பின்னப்பட்டிருந்தது என்பதையும், தமிழர் தேசிய விடுதலைப்போர் குறித்து இந்தியாவின் வகிபாகம் என்ன என்பதையும் வரலாறு நம் எல்லோருக்கும் கற்பித்திருக்கிறது.

இந்திய- இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் அமைதி காக்கும் படை என்ற போர்வையினுள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வட- கிழக்கில் குவிக்கப்பட்டதும், இத்தகைய இராணுவ அழுத்தத்தின் கீழ் விடுதலைப்புலிகளின் ஆயிதங்கள் IPKF (இந்தியன் பீஸ் கீப்பிங் ஃபோஸ்) இடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகள், தமது கைகளில் இருந்த ஆயுதங்களை கையளித்துவிட்டு அறப்போரில் குதித்ததும் மறந்துவிடக்கூடியதல்ல.

தொடர்ந்து, இக்காலப்பகுதியில் அறப்போர் வீரன் திலீபனை 26, செப்ரெம்பர் 1987 இல் இம்மண் தியாகம் செய்தது. பின்நாட்களில் இதே வழியில் அன்னை பூபதியை இந்தமண் தன் விடுதலைக்காய் ஈந்தது.

இந்திய இலங்கை கூட்டுச் சதியால் 10.10.1987இல் குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட 12 தியாகிகளை தமிழர் விடுதலைக்காக இழந்ததைத் தொடர்ந்து வட-கிழக்கில் இந்தியப்படை -த.வி.பு. மோதல் ஆரம்பமானது.

இம்மோதல்களில் இருதரப்புகளும் சேதங்களைச் சந்தித்திருப்பினும் உலகின் நான்காவது பெரிய இராணுவமாக இருந்த இந்திய இராணுவத்தால் த.வி.பு. களால் ஏற்படுத்தப்பட்ட இழப்புகளை ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை என்பது வெள்ளிடை மலையாகவே இருந்தது.

இந்திய அமைதிகாக்கும் படை நடத்திய படுகொலைகளும் பெண்கள்மீதான பாலியல் பலாத்காரங்களும் வட-கிழக்கின் சொத்துக்கள் பொருட்களின் அழிவுகளும் இதற்கு சான்று பகர்ந்தன.

அமைதிகாக்கவென்று குவிக்கப்பட்ட இராணுவம், மாறாக ஒரு எதிரி இராணுவமாக, அமைதிகாப்பதற்கான எத்தகைய உளத் தயார்நிலையும் கொண்டிராத, சாதாரண, மிகக் கீழ்த்தரமான, கொடூரமான ஆக்கிரமிப்பு இராணுவமாகவே நடந்துகொண்டது என்பது இம்மண்ணில் மெய்ப்பிக்கப்பட்டது.

இந்திய அரசால் ஏவப்பட்ட IPKFஎன்ற ஆக்கிரமிப்பு இராணுவத்தின் இரும்புச்சப்பாத்துக்களுக்கு அடியில் நசுக்கப்பட்டு ஈழத் தமிழ்மண் குருதியில் தோய்ந்தது. இந்நிலை மூன்று ஆண்டுகள் தொடர்ந்தது.(1987, 1988,1989)

**வல்வைப்படுகொலை**

1989 ஆகஸ்ட் 02ல் அதிகாலை வல்வெட்டித்துறை நகரின் பிரதான IPKF முகாமிலிருந்து ஒவ்வொன்றும் 30 பேர்களைக்கொண்ட இரண்டு இந்தியப்படை அணிகள் தேடுதல்வேட்டைக்குப் புறப்பட்டன. காலை 11மணியளவில் இவ் அணி வல்வெட்டித்துறை சந்தைப்பகுதியை நெருங்கிய சமயம் பட,பட வென துப்பாக்கி வேட்டுகள் தீர்ந்தன...த.வி.பு. களிற்கும் IPKF இற்கும் இடையேயான ஒரு சிறிய மோதல் (தாக்கிவிட்டு, தாக்கியவர்கள் மறைந்து சென்றுவிடுவர்) அது. இம் மோதலில் 6 IPKF படையினர் கொல்லப்பட்டனர். பத்து IPKF

**வல்வை ஜெயம், சாருகன்**

படையினர் காயமடைந்தனர் என்பது பின்னர் அறியப்பட்ட செய்தி.

நாட்டில் அமைதியை நிலைநாட்ட வென்று பணிக்கு அமர்த்தப்பட்ட இராணுவம் இவற்றை எதிர்கொள்ளவேண்டியிருப்பது தவிர்க்க முடியாததே. ஆயினும் எம் தாய் தேசத்தை ஆக்கிரமித்திருந்த IPKF இராணுவத்திற்கு இத்தகைய சூழ்நிலையை முகாமை செய்யும் திறன் கிஞ்சித்தும் இருக்கவில்லை. விளைவு மாறாக இருந்தது.

சம்பவத்தைத் தொடர்ந்து எண்ணிக்கையில் அதிகமான படையினர் நகருக்குள் பிரவேசித்து, கண்மூடித்தனமாக அதிகளவில் மக்களை சுட்டுக் கொன்றதுடன் கடைகளுக்குள் வைத்து எரித்தும் கொன்றனர். அதைத் தொடர்ந்து நகரின் எல்லாவயதினரும் அடங்கிய இருபாலாரும் சந்தை வெளியில் இருத்திவைக்கப்பட்டு, அவர்களுக்குள் மூன்று சுற்றுகளாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன; இதன்போது பலர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.






மேலும், அவ்வூரைச் சேர்ந்த சுப்பிரமணியம், சிவகணேஸ் ஆகியோரது இருவீடுகள் விசாலமான வீடுகளாக இருந்ததனால்- துப்பாக்கிவேட்டுகளிற்கு அஞ்சிய பொதுமக்கள் அவ் வீடுகளினுள் தஞ்சம் புகுந்திருந்தனர். (அண்ணளவாக 300பேர்) அப்போது நண்பகல் 1.00 மணியளவில் சுப்பிர மணியத்தின் வீட்டினுள் புகுந்த IPKF, அவரையும், அங்கிருந்தவர்களில் பலரையும் தமது துப்பாக்கிகளுக்கு இரையாக்கினர்.

பிற்பகல் 4.00 மணியளவில் சிவகணேஸ் வீட்டினுள் புகுந்த IPKF அங்கிருந்து சிலரை அழைத்துச் சென்று தமது கரங்களில் இருந்த துப்பாக்கி குண்டுகளிற்கு மேலும் அவர்களைப் பலியாக்கினர். அந்த நாளின் முடிவில் 52 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர் என வல்வெட்டித்துறை குடிமக்கள் சபை தெரிவித்திருந்தது.

மறுநாள்- 03, ஆகஸ்ட் 1989ல் IPKF ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திவிட்டு, பெரும் எண்ணிக்கையான இளைஞர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இதன்போது சுமார் 75 இளைஞர்கள் கடும் வெயில்காய்ந்து கொண்டிருந்த பிரதான,தார்வீதியின் மீதாக பலாத்காரமாக உருட்டி எடுத்தனர் (அங்கப் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டனர்) அத்தோடு மேலும் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; இதன்போது அந்த இராணுவத்தின் கொடூரமான தாக்குதலால் 6 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

அங்கு ஊரடங்கு அமுலில் இருப்பதை அறியாத, அயல்கிராமத்தவர்கள் வீதிக்கு வந்தபோது அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதிகமான காயமடைந்த பொதுமக்கள், உள்ளூர் முதலுதவியாளர்களால் முதலுதவி அளிக்கப்பட்டு அருகில் உள்ள ஊறணி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## வல்வைப் படுகொலை நினைவு!



02,03,04, ஆகஸ்ட் 1989



காயமடைந்த சிலர் சம்பவ இடத்திலிருந்து 5 மைல்கள் தொலைவில் இருந்த பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலைக்கு நடந்து சென்று அன்று மாலை பொழுதிலேயே வைத்தியசாலையை அடைய முடிந்திருந்தது. அக்காலப்பகுதியில் மந்திகை வைத்திய சாலையில் பணியில் ஈடுபட்டிருந்த *மெடிக்கல் சான்ஸ் ஃப்ரொன்ரீயர்* என்ற அமைப்பைச் சேர்ந்த மருத்துவத்தாதியான ஜக்குலின், சம்பவ இடத்திற்கு அம்புலன்சை அனுப்பி மக்களுக்கு உதவுவதற்கு எடுத்த முயற்சிக்கான அனுமதி IPKF ஆல் மறுக்கப்பட்டது. இது காயப்பட்ட மக்களுக்கு உதவு வதற்கு IPKF எந்த முயற்சியும் எடுக்க வில்லை என்பதைக் காட்டுவதாக இருந்தது. மறுநாள்-4ஆம் திகதி ஊரடங்கு நீக்கப்பட்ட பின்பே அந்த மக்கள் மருத்துவ உதவியை நாடமுடிந்தது.

**உண்மைக்குப் புறம்பான- மறுப்பறிக்கைகள்**

இந்தச் சம்பவம் IPKF ஐ இத்தீவை விட்டு வெளியேற்றுவதற்கான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் இடம் பெற்றதாகையால், இந்திய இராணுவத்தின் மீதாக அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கான த.வி.பு.களின் முயற்சியாக இது இருக்கலாம் என *த ஃபினான் சியல் ரைம்ஸ் றிப்போர்ட்*என்ற ஊடகம் மழுப்பியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக இந்தியத் தூதரகம் தனது அறிக்கையில் இந்திய இராணுவத்திற்கும் த.வி.பு.களிற்கும் இடையான மோதலில் தவறுதலாக 24 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என அறிவித்திருந்தது.

ஆல் இந்தியா வானொலி தனது செய்தியில் 18 த.வி.பு. களும் 12 பொதுமக்களும் கொல்லப்பட்டனர் எனவும் அறிவித்தது.

பிற்காலத்தில் நாட்டைவிட்டு மறைந்து வாழ்ந்த - அச்சமயம் வட-கிழக்கின் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் இது மிகைப்படுத்தப்பட்ட செய்தி என மறுப்புத் தெரிவித்திருந்தார்.

**IPKF தளபதிகள், நடந்த சம்பவத்திற்கு மன்னிப்புக் கோரல்**

சம்பவத்திற்கு மறுதினம் IPKF வடமராட்சிப் பிரதேச கட்டளைத் தளபதி சங்கர் பிரசாத், பிரதிக்கட்டளைத்தளபதி கொல் அவுஜிலா, உடுப்பிட்டி கட்டளை அதிகாரி கேணல் சர்மா ஆகியோர் சம்பவத்தில் உயிர் பிழைத்த சிலரைச் சந்தித்து மன்னிப்புக் கோரியிருந்தனர்.

**இந்தியாவுக்கு அபகீர்த்தி**

1998-2004 காலப்பகுதியில் இந்தியாவின் பாதுகாப்பு மந்திரியாக கடமையாற்றிய ஜோர்ஜ் ஃபெர்னான்டஸ் அப்போது இச்சம்பவத்தை "இந்தியாவிற்கு இது மைலாய்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது, ஆங்கிலேயப் படைகளுக்கு அதிகளவில் அபகீர்த்தியை ஏற்படுத்தியது இந்தியாவில், யூலியன்வாலாபாயில் அவர்கள்மேற்கொண்ட படுகொலை. அதேபோன்று வியட்னாமில் அமெரிக்கர்களுக்கு மிகவும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது, அவர்கள் அங்கு மைலாயில் செய்த படுகொலை சம்பவம். இவைபோன்று இந்தியாவுக்கு மிகவும் அபகீர்த்தியை ஏற்படுத்தியது, வல்வைப்படுகொலை என ஜோர்ஜ் ஃபெர்னான்டஸ் தெரிவித்திருந்தார்.

**உண்மை விளைவுகள்**

தொடர்ந்து மூன்று நாட்களாக (2,3,4, ஆகஸ்ட் 1989) IPKF இராணுவத்தின் முற்றுகையில் இருந்த, வல்வை நகரில் இச்சம்பவங்களின்போது மொத்தம் 63 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்; 43 பேர் படுகாயமடைந்திருந்தனர்; 123 வீடுகள் எரிக்கப்பட்டிருந்தன;45 கடைகள் எரிக்கப்பட்டிருந்தன; 176 படகுகள் எரியூட்டப்பட்டிருந்தன. இராணுவ அரக்கனின் பிடியில் வல்வை நகர் சர்வமும் சிதைக்கப்பட்டிருந்தது.

**தமிழர் தலைவிதி இன்னும் மாற்றி எழுதப்படவில்லை**

2009 யும் கடந்து-இதற்கு 22 ஆண்டுகளுக்குமேலாக- 2012 இல்- இச்சம்பவங்களிலும் மிகமோசமான இராணுவ அராஜகங்களைத்தாண்டி, உச்சமாய் முள்ளிவாய்க்கால் சம்பவத்தைக் கடந்து நிற்கிறோம். ஈழத் தமிழர் இனப்பிரச்சினையை சர்வதேசம் தமது கைகளில் எடுத்துள்ள நிலையிலும் நாங்கள் எமது பிரச்சினைகள் தீர்ந்துபோவதற்கான சரியான திசையில் முகங்கொண்டுள்ளோமா என்பது கேள்விக்குரியதே.

அன்றும் சரி இன்றும் சரி இந்திய தேசத்தின் நிலைப்பாடு, ஈழத்தமிழர் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படுவதில் பெரும் தடைக்கல்லாகவே இருந்துவருகிறது. இனியும் இந்தியா புரிந்துகொள்ளுமா? என்பதற்கு நல்ல பதில் இருக்கமுடியாது.

தமிழ் மக்கள் அரசியலில் இருந்து அந்நியப்படுவதும் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை. மாறாக தமது தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் புதிய சிந்தனைகளுக்குள் செல்ல வேண்டியதும் புதிய வழிவகைகளை ஆராய வேண்டியதுமான உயிர்ப்பான ஜனநாயகச் சூழலுக்குள் பயணிக்கவேண்டிய தேவைகளே அவர்கள் முன் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பிரதேச செயலகத்தின் கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்புரைக்கு இணங்க வவுனியா பிரதேச செயலகத்தினால் பிரதேச கலை இலக்கிய பெருவிழாவை முன்னிட்டு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் மத்தியில் நடத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் விரைவில் நடத்தப்படவுள்ளதாக வவுனியா பிரதேச கலை இலக்கிய பெருவிழாவில் வைத்து வழங்கப்படும் என்று வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கட்டுரை**

**கனிஷ்ட பிரிவு**

புவிதா பூவேந்திரன் (வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்), தர்சா சிவபாலராஜா (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், விஜேந்தினி தனபாலசிங்கம் (வ/விபுலானந்தா கல்லூரி), ஜானுசா துரைசிங்கம் (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**சிரேஷ்ட பிரிவு**

தினுஜா மனோகரன் (வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), கி.தர்சனா (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), சி.சியாமளச்செல்வி (வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சுகன்யா யோகராஜா (வ/ புதுக்குளம் மகா வித்தியாலயம்)

**கவிதை**

**கனிஷ்ட பிரிவு**

வி.டிலக்சனா (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ம.கயலினி (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), தி.டனுசன் (வ/வவுனியா தமிழ் மத்திய வித்தியாலயம்),இ.மிலோஜன் (வ/வவுனியா தமிழ் மத்திய வித்தியாலயம்)

**சிரேஷ்ட பிரிவு**

க.கோபிகா (வ/வவுனியா தமிழ் மத்திய வித்தியாலயம்), ஜீ.கரிஸ்மியா (வ/வவுனியா தமிழ் மத்திய வித்தியாலயம்), கி.தட்சாயினி (வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ந.பிரம்மியா (வ/வவுனியா தமிழ் மத்திய வித்தியாலயம்)

**ஆங்கிலம் (கனிஷ்டபிரிவு)**

ஆரபி தசாவதாரன்சர்மா (வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்),ஆரதி தசாவதாரன்சர்மா (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**கவிதை பாடும் போட்டி (நேரடியானது)**

**கனிஷ்ட பிரிவு**

சிபிசா நவரட்ணம் (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), கேதுஜா இராசரட்ணம் (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சரூபனா குலசிங்கம் (வ/பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம்), நவீந்திரன் கிருஸ்ணராஜ் (வ/பெரியகோமரசன் குளம் மகா வித்தியாலயம்)

**கையெழுத்துப்போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

திவ்வியா சிவகுமாரன் (வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சுவாதிகா குணரூபன் (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), இ.எ.சகானா (வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம்), கிசோமி உத்தரியநாதன் (வ/பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம்)

**பாடல் நயத்தல்**

**சிரேஷ்ட பிரிவு**

வினித்தா விசுவலிங்கம் (வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம்), ம.மோகனப்பிரியா (வ/பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம்),ஸ்ரீகரன் கேசவன் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஜெ.துசன் (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

**திறந்த பிரிவு**

**கவிதை**

தம்பித்துரை ஐங்கரன் (இல. 29, கோவில் வீதி, குருமண்காடு,வவுனியா) , ச.சுகந்தினி (இல.18, பிள்ளையார் கோவில் வீதி, வெளிக்குளம்,வவுனியா), சு.வரதகுமார் (முள்ளிப்புலவு நெளுக்குளம், வவுனியா), சி.நாகராஜா (பிரதேச செயலகம் வவுனியா)

**ஆங்கிலம்**

வ.தர்மலிங்கம் (நொச்சிமோட்டை, ஓமந்தை)

**பாடலாக்கம்**

மாணிக்கம் ஜெகன் (இல.40/16, கற்குழி, வவுனியா), தம்பித்துரை ஐங்கரன் (இல.29, கோவில் வீதி, குருமண்காடு , வவுனியா)

**சிறுகதை**

தம்பித்துரை ஐங்கரன் (இல.29, கோவில் வீதி, குருமண்காடு, வவுனியா), பிறைசூடி ஹேம்குமார் (32 கல்வியியற் கல்லூரி வீதி, பூந்தோட்டம், வவுனியா), கேசவன் சுதர்சன் (130/1, முதலாம் ஆம் ஒழுங்கை, குட்செட் வீதி, வவுனியா)

**நாட்டார் கலை கற்றல்**

விஜயலட்சுமி இராஜமனோகரன் (295/59, 9 ஆம் ஒழுங்கை, கோவில்புதுக்குளம், வவுனியா)

**இலக்கியவிமர்சனம்**

சு.வரதகுமார் (முள்ளிப்புலவு நெளுக்குளம், வவுனியா)

**சிறுவர் கதை**

சு.வரதகுமார் (முள்ளிப்புலவு நெளுக்குளம், வவுனியா) (அ-9-266)



அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் சிறுவர் நிதியம் நிறுவனத்தால் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள சோலைநகர் கிராமத்தில் உணவு பதனிடல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது.......

## அதிகஷ்ட பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு கல்விவலயத்தில் 12 பாடசாலைகள் அதிகஷ்ட பாடசாலைகளாகவும் 9 பாடசாலைகள் கஷ்டப்பாடசாலைகளாகவும் இனங்காணப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கல்விவலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன் நிமிர்த்தம் புதுக்குடியிருப்பு கோட்டத்தில் மன்னகண்டல் அ.த.க.பாடசாலை, சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை, இருட்டுமடு தமிழ் வித்தியாலயம், குரவில் தமிழ் வித்தியாலயம், தேராவில் தமிழ் வித்தியாலயம், இரணைப்பாலை தமிழ் வித்தியாலயம், நெத்திலியாறு அ.த.க.பாடசாலை, தேவிபுரம் அ.த.க. பாடசாலை ஆகியனவும் கரைதுறைபற்று கோட்டத்தில் முறிப்பு தமிழ் வித்தியாலயம் , கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, குமுழமுனை மகா வித்தியாலயம், உண்ணாபிளவு அ.த.க. பாடசாலை என்பன அதிகஷ்டப் பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு கோட்டத்தில் றெட்பானா பாரதி வித்தியாலயம், கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பனவும் கரைதுறைப்பற்றில் வற்றாப்பளை மகா வித்தியாலயம், உடுப்புக்குளம் மகா வித்தியாலயம், அலம்பில் றோ.க.த.க.பாடசாலை, தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலயம், கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை, வட்டுவாகல் அ.த.க. பாடசாலை என்பன கஷ்டப்பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-266)

## இணையத்தளங்களின் வங்கிக் கணக்குகள் குறித்து விசாரணை

(கொழும்பு)

அரசாங்கத்தால் அண்மையில் முடக்கப்பட்ட ஸ்ரீலங்கா மிரர் மற்றும் எக்ஸ் நியூஸ் இணையத்தளங்களின் வங்கிக் கணக்குகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு இணையத்தளங்களினதும் வங்கிக் கணக்குகளில் காணப்படும் பணம் தொடர்பில் இணையத்தளங்களின் பொறுப்பாளர் ரூவான் பெர்டினாண்டசிடம் இரகசிய பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

சுமார் ஏழு மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது இணையத்தளங்களுக்கு செய்தி கிடைக்கப்பெறும் விதம் மற்றும் நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரகசிய பொலிஸின் கணனிப்பிரிவினர் தீவிர விசாரணை நடத்தியுள்ளனர்.

இன்றைய தினமும் ரூவானிடம் இரகசிய பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர். லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

## அரசாங்கத்தின் கடன்களை மக்கள் ஏன் செலுத்த வேண்டும்

## ஐ.தே.க. கேள்வி

(கொழும்பு)

அரசாங்கத்தின் கடன்களை மக்கள் ஏன் செலுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் செய்து கொண்ட ஹெஜின் ஒப்பந்தங்களை போன்று அரசாங்கம் உலகின் பல நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மெலும் தெரிவிக்கையில்,

ஹெஜின் உடன்படிக்கை தொடர்பான சர்ச்சைக்கு ஆரம்பத்திலேயே தீர்வு கண்டிருக்க முடியும்.

மேன்முறையீட்டு வழக்கின் மூலம் பல மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மீண்டும் மேன்முறையீடு செய்வதனால் அதிகளவு பணம் விரயமாகும்.

மக்களின் பணத்தை கொண்டு இந்தக் கடன்களை செலுத்துவதனை தவிர அரசாங்கத்திற்கு வேறு வழி கிடையாது

தூரநோக்கமின்றி தீர்மானம் நிறைவேற்றி கடன் பெற்றுக்கொண்ட அதிகாரிகளே இவ்வாறான நட்டங்களுக்கு பொறுப்பு ஏற்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

178



## தன்வினை தன்னைச்சுடும்

சக்கரவர்த்தி அக்பருக்கு மிகவும் விருப்பமான நண்பன் பீர்பால். அவர் ஆக்ராவில் உள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதால் அனைவரும் அவர் மேல் பெருமதிப்பு வைத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், பலர் அக்பர் பீர்பாலுடன் நெருக்கமாக இருப்பதைக் கண்டு பொறாமை கொண்டனர். அவ்வாறு பொறாமை கொண்டவர்களுள் ஒருவன் அக்பரின் அந்தரங்க முடி திருத்துபவன். அக்பர் பீர்பாலுக்கு விலையுயர்ந்த பரிசுகளை அளிப்பதைக் கண்டு அவன் மிகவும் பொறாமையடைந்திருந்தான்.

பீர்பாலை அங்கிருந்து எப்படியாவது ஒழித்து விட ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும் என அவன் யோசித்தான்.

## பீர்பால் கதைகள்

ஒருநாள் அவன் அக்பருக்கு முடி திருத்திக் கொண்டிருக்கும் போது பாதுஷாவே! தங்களுடைய தந்தையார் ஹுமாயூனுக்கு சேவை செய்தது போன்றே தங்களுக்கும் சேவை செய்வது எனக்கு ஆனந்தமாக உள்ளது. தங்களது தந்தை சொர்க்கத்தில் எவ்வாறு உள்ளாரோ! என்றான்.

எனக்கும் அவர் எப்படியுள்ளார் எனத் தெரிந்து கொள்ள ஆசைதான் என்றார் அக்பர்.

பாதுஷாவே! பல அற்புத சக்திகள் படைத்த எனது நண்பனின் மூலம் நான் உங்கள் தந்தை எப்படி உள்ளார் என்பதை அறிய முடியும்! எனக் கெட்ட எண்ணம் கொண்ட முடி திருத்துபவன் கூறினான்.

அடுத்த நாள் காலை, அவன் நமது நாட்டிலேயே மிகவும் திறமைசாலியான ஒருவனையே சொர்க்கத்திற்கு அனுப்பி தங்களுடைய தந்தையார் மற்றும் மூதாதையர்களைப் பற்றி அறிய முடியும் என எனது நண்பன் கூறினான்! என்று அக்பரிடம் கூறினான்.

இது ஒரு நல்ல யோசனை. ஆனால் யாரை சொர்க்கத்திற்கு அனுப்புவது? என்றார் அக்பர்.

பாதுஷாவே! நமது நாட்டிலேயே மிகப் பெரிய அறிவாளி பீர்பால் எனப் பலமுறை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவரையே நாம் சொர்க்கத்திற்கு அனுப்புவோம். ஏனெனில், அவர் ஏனையவர்களை விட மிகவும் புத்திசாலி என சூழ்ச்சியுடன் கூறினார்.

நாம் எப்படி பீர்பாலை சொர்க்கத்திற்கு அனுப்புவது?எவ்வளவு காலம் அவர் அங்கு இருப்பார்? எனக் கேட்டார் அக்பர்.

யமுனை நதியின் வடக்கு கரையில் ஒரு பாழடைந்த கிணறு உள்ளது என எனது நண்பன் கூறினான். பௌர்ணமி அன்று இரவு சொர்க்கத்திற்குச் செல்பவர் அக்கிணற்றுக்குள் சென்றால் உடனே சொர்க்கத்தைச் சென்றடையலாம் என்றான்.

ஒருமாதம் அங்கு தங்கி சென்ற வேலை முடிந்தவுடன் திரும்பி விடலாம் என நயவஞ்சகத்துடன் அவன் கூறினான்.

அக்பர், பீர்பாலை அழைத்து சொர்க்கத்திற்கு செல்லத் தயாராக இருக்குமாறு கூறினார். அக்கிணறு வழியே சொர்க்கம் செல்ல அனைத்து ஏற்பாடுகளும் செய்யுமாறு கூறினார்.

இதனைக் கேட்ட பீர்பால் அதிர்ந்தார். அக்பரின் முடி திருத்துபவனே இவ்வாறு கூறியுள்ளான் என்பதைப் புரிந்து கொண்டார்.

அப்பழைய பாழடைந்த கிணறு, பல விசப்பாம்புகளின் இருப்பிடம் என்பது பீர்பாலுக்குத் தெரியும். அதனுள் சென்றால் கண்டிப்பாக மரணம் நிச்சயம் என்பது விளங்கிற்று.

அன்று இரவே பீர்பால் நம்பிக்கையான ஆட்களைக் கூப்பிட்டு அந்தக் கிணற்றை சுத்தம் செய்யச் சொன்னார். பின்னர் அக்கிணற்றிலிருந்து ஒரு சுரங்கப் பாதையை அமைத்துக் கொண்டார்.

அக்பர், பீர்பலை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தார். பீர்பால் ஒரு மாதத்தில் சொர்க்கத்திலிருந்து திரும்பி வந்து விடுவார் என்பதைக் கேட்டவுடன் சற்று மகிழ்ச்சியடைந்தார்.

பீர்பால் சொர்க்கம் செல்லும் அந்த இரவில் அக்பர் பழைய கிணறு வரை ஒரு பெரிய வழியனுப்பு விழாவை நடத்தினார்.

அக்கிணற்றுக்குள் நுழைந்த பீர்பால், விரைவில் சுரங்கப் பாதை வழியே வெளியே வந்தார். ஒரு மாதம் தனது வீட்டினுள்ளே தங்கினார். அந்த மாதம் முழுவதும் அவர் தனது தலை முடியையும் நகங்களையும் வெட்டாமல் இருந்தார்.

இடை நேரத்தில் முடி திருத்துபவன் பீர்பால் இறந்து விட்டார் என எண்ணி மகிழ்ச்சியுற்றான். மெல்ல அவன் மன்னரிடம் தனக்குப் பிடிக்காதவர்களைப் பற்றிப் பேசினான்.

பீர்பால் இல்லாமல் ஏனைய அமைச்சர்களும் உதவியற்ற நிலையில் காணப்பட்டனர். அக்பருக்கு மிகவும் விருப்பமானவன் ஆனான் முடிதிருத்துபவன்.

ஒருமாதம் கழித்து அவையினர் பீர்பாலின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தனர். அடுத்த பௌர்ணமி இரவன்று அனைவரும் பழைய கிணற்றுக்குச் சென்றனர்.

அக்பரும் ஏனையவர்களும் இன்புறும் வகையில் பீர்பால் அக்கிணற்றிலிருந்து வெளியே வந்தார். ஆனால் முடி திருத்துபவனோ அவனது திட்டம் தோல்வியடைந்ததைக் கண்டு ஏமாற்றமுற்றான்.


அரசவைக்கு வந்து நடந்தவற்றைக் கூறு! என அக்பர், பீர்பாலை தனது தேரருகில் அழைத்துச் சென்றார்.

பாதுஷாவே! நான் தங்களின் மதிப்புக்குரிய தந்தையாரையும் மூதாதையர்களையும் சொர்க்கத்தில் கண்டேன்.

அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக நலமுடன் உள்ளனர். அவர்களின் வாழ்த்துக்களை உங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்கள்.

ஆனால், அங்கு ஒரு பிரச்சினை. அவர்களுடைய வளர்ந்த கூந்தலையும் நீண்ட நகங்களையும் வெட்டிவிட அங்கு யாரும் இல்லை. அதனால் சக்கரவர்த்தி ஹுமாயூன் தனது அந்தரங்க முடி திருத்துபவனின் சேவை கிடைத்தால் நன்றாக இருக்கும் என விரும்புகிறார்! என்றார் பீர்பால்.

இப்போது எவ்வாறு ஒருவரை சொர்க்கத்திற்கு அனுப்புவது என நமக்குத் தெரிந்துவிட்டதால், நான் எனது அந்தரங்க முடி திருத்துபவரையே எனது தந்தைக்கு சேவை செய்ய சொர்க்கம் அனுப்புகிறேன் என அக்பர் அறிவித்துவிட்டு முடி திருத்துபவனிடம் திரும்பி அடுத்த பௌர்ணமி இரவில் சொர்க்கம் செல்லத் தயாராயிரு! என்றார்.



அப்பொல்லாத முடி திருத்துபவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பீர்பாலின் கதை ஒரு கற்பனையே என அக்பரிடம் கூறினால் தானே பொய் சொன்னது அக்பருக்குத் தெரிந்து விடுமே என அஞ்சினான்.

அக்கிணற்றிலிருந்து வெளியேற பீர்பால் ஏதேனும் வழி அறிந்திருக்க வேண்டும்.

அதனால் நானும் அவ்வழியே வெளியில் தப்பிக்கலாம்! என நினைத்துக் கொண்டான்.

ஆனால், பீர்பால் சொர்க்கம் சென்று திரும்பியவுடன் தனது நம்பிக்கையான வேலையாட்களிடம் மீண்டும் கிணற்றினுள் கொடிய விஷப் பாம்புகளைப் போடச் சொன்னது அவனுக்குத் தெரியாது.

அதனால் முடிதிருத்துபவன் கிணற்றினுள் சென்றவுடன் பீர்பாலின் தலைவிதி எவ்வாறு முடியவேண்டும் என நினைத்தானோ அதனை அவன் சந்தித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நிய நாட்டு படைகளை சிரியாவுக்குள் விடமாட்டோம்

## ஈரான் அரசு எச்சரிக்கை

சிரியாவில் அந்நிய நாட்டு படைகள்உள்நுழைவதைபார்த்துக்கொண்டிருக்கமாட்டோம் என ஈரான் எச்சரித்துள்ளது. போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இதுவரை 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்துக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது.

குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியில் சண்டை நீடிப்பதால் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். உயிருக்கு பயந்து இரண்டு இலட்சம் பேர் துருக்கி மற்றும் ஜோர்தான் நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இந்நிலையில் சிரியாவின்தோழமை நாடுகளாக சீனா, ரஷ்யா, ஈரான் ஆகியவை உள்ளன. இதன் காரணமாக சிரியா மீது பொருளாதார தடை விதிக்க இந்த நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

ஈரான் இராணுவ துணை தளபதி மசூத் ஜசாயெரி குறிப்பிடுகையில்,

சிரியாவில் வெளிநாட்டு படைகள் தலையிடுவதை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டோம்.

எனினும் இப்போதைக்கு நாங்கள் சிரியாவுக்கு படைகள் எதையும் அனுப்பவில்லை. மனிதாபிமான உதவிகளை மட்டும் அளித்து வருகிறோம். நிலைமையை கூர்ந்து கவனித்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# வங்கி மோசடியில் ஈடுபட்ட 4 பேருக்கு மரண தண்டனை

ஈரானில் வங்கி மோசடியில் ஈடுபட்ட 4 பேருக்கு மரணதண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது என அமெரிக்காவும் ஐ.நாவும் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருவதுடன் பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன.

இந்நிலையில் தேசிய வங்கியில் 2.6 பில்லியன் அளவுக்கு கடன் பெற்று மோசடியில் ஈடுபட்டது கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடியில் அரசியல் தலையீடு இருப்பதாகவும் கூறப்பட்டது. குறிப்பாக ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத்தின் நெருங்கிய நண்பர் எஸ்பான்டியர் ரகீம் மாஷிக்கு வங்கி மோசடியில் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் மோசடி தொடர்பாக 39 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் 4 பேருக்கு மரண தண்டனை விதித்தது.

இரண்டு பேருக்கு ஆயுள் தண்டனையும் ஏனையவர்களுக்கு 25 ஆண்டு வரை சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது. (அ-2)

## உலக தரிசனம்

# கார்க்குண்டு வெடிப்பு! 19 பேர் உயிரிழப்பு; ஈராக்கில் துயரம்



ஈராக் தலைநகர் பக்தாத்தின் இரண்டு இடங்களில் நேற்று முன் தினம் கார்க் குண்டுகள் வெடித்த தில் 19 பேர் உடல்சிதறி பலியாகி னர். 50 இற்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர். குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் தலைமையகம் அமைந் துள்ள பகுதியில் காரில் வந்த தற் கொலைப்படை தீவிரவாதி வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

பயங்கர சத்தத்துடன் கார் வெடித்து அந்த பகுதி முழுவதும் தீப் பற்றியது. அதில் 17 பேர் பலியாகினர். 40 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் 10 பேர் பொலிஸார் என தெரிந்தது.

பலூஜா என்ற இடத்தில் நடந்த 2 ஆவது கார்க் குண்டு வெடிப்பில் 2 பேர் உடல் சிதறி பலியாகினர். 10 பேர் காயமடைந்தனர். (அ-2)

# கவுதமாலாவில் எரிமலை வெடிப்பு; பொதுமக்கள் வெளியேற்றம்



(சாண்டிகியாடோ)

வடஅமெரிக்காவில் உள்ள கவு தமாலா நாட்டில் சாண்டிகியாடோ என்ற இடத்தில் எரிமலை உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பே இந்த எரிமலையில் இருந்து புகை கிளம்பியது.

எனவே, அது எந்த நேரமும் வெடிக்கலாம் என கருதி அப்பகுதியில் குடியிருந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இந்த நிலையில் அந்த எரிமலை நேற்றுமுன்தினம் வெடித்துச் சிதறியது.

அதில் இருந்து தீக்குழம்பு ஆறாகப் பெருகி ஓடுகிறது. மேலும் சாம்பலும் கரியுமாக புகை கிளம்பி விண்ணில் பரவுகிறது. எனவே, அப்பகுதியில் விமானம் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# விசாரணைகளை ஹேக்கில் நடத்துமாறு கடாபியின் புதல்வர் சயிப் அல் கோரிக்கை

வழக்கு விசாரணைகளை ஹேக்கில் நடத்துமாறு முன்னாள் லிபிய ஜனாதிபதி கடாபியின் புதல்வர் சயிப் அல் இஸ்லாம் கோரிக்கை விடுத்துள்ளார்.

லிபியாவில் தமக்கு எதிரான விசாரணைகள் நடத்தப்படக் கூடாது எனவும் ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

சயிப் அல் இஸ்லாம் தனதுசட்டத்தரணிகளின் ஊடாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சயிப் அல் இஸ்லாமிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சயிப் அல் இஸ்லாமை சர்வதேச நீதிமன்றிடம் ஒப்படைக்க முடியாது எனவும் அவருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் லிபியாவிலேயே நடத்தப்பட வேண்டுமென அந்நாட்டு இடைக்கால அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மரணத்திற்கு தாம் அஞ்சப் போவதில்லை எனவும் சொந்த நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டால் அதனை கொலையாக கருத வேண்டும் எனவும் சயிப் அல் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமக்கு எதிரான விசாரணைகளை ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நடத்துமாறு கோரியுள்ளார். (அ-2)

# சிரிய விவகாரம் தொடர்பில் அமெ. ஜனாதிபதி ஆலோசனை

(வோஷிங்டன்)

சிரிய விவகாரத்தில் அரசியல் ரீதியில் தீர்வு காண்பது குறித்து துருக்கி பிரதமர் தாய்யிப் எர்டோகானுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலை பேசி ஊடாக தொடர்பு கொண்டு பேசினார்.

இருவரும் சுமார் 36 நிமிட நேரம் பேசினர். அப்போது அலிப்போ நகரில் நடைபெற்று வரும் சண்டையை நிறுத்தவும் மனித படுகொலை நடப்பதை தடுப்பது எப்படி என்பது குறித்தும் ஆலோசித்ததாக கூறப்படுகிறது. துருக்கி பிரதமரான எர்டோகான், சிரிய ஜனாதிபதி ஆசாத்தின் பழைய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் கடந்த இருவாரமாக கடும் மோதல் நடப்பதால் உயிருக்கு பயந்து ஏராளமானோர் நாட்டை விட்டு ஓடுகிறார்கள். துருக்கி, லெபனான், ஈராக் ஆகிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைகிறார்கள்.

துருக்கியில்மட்டும்சுமார்44ஆயிரம் பேர் தஞ்சம் புகுந்தனர். (அ-2)




பிரேசிலில் நடைபெற்ற ஒப்பந்த நிகழ்ச்சியில் வெனிசுலா ஜனாதிபதி ஹூகோ சாவேஸ் (வலது) மற்றும் பிரேசில் ஜனாதிபதி தில்மா ரூசெப் பங்கேற்றதைப் படத்தில் காணலாம்.

# சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு உலகத் தலைவர்கள் ஆதரவு வேண்டும்

## ஹிலாரி கிளின்டன் வலியுறுத்து


(வோஷிங்டன்)

மனித உரிமைகளை குறிப்பாக சிறுபான்மையினர்களின் உரிமைகளை பாதுகாக்கும் உலக தலைவர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வோஷிங்டனில் உள்ள ஒரு சர்வதேச அறக்கட்டளை சார்பாக நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், இந்தியா, பாகிஸ்தான்,சீனா போன்ற நாடுகள் மட்டுமல்லாது அனைத்து நாடுகளின் தலைவர்களும் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகன் குறிப்பாக மைனாரிட்டி மக்களின் உரிமைக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

அவர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.




2011 இற்கான மதசுதந்திரம் என்ற புத்தகத்தையும் அவர் வெளியிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை அமுலாக்க நடவடிக்கைகள் ஆரம்பம்

## அமைச்சர் பீரிஸ் திட்டவட்டம்



போர்ப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 2009 இல் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் இரு தரப்புமே போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கை குற்றம் சாட்டியது.போர் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றதாக மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தன.

இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை உலக நாடுகள் வலியுறுத்தி வந்தன. போரின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் விசாரிக்குமாறு இலங்கையிடம் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான் கீ மூனின் நிபுணர் குழுவும் வலியுறுத்தியது.

இதையடுத்து இராணுவம் நடத்திய போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க போர்ப் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்தார்.

இந்தக் குழு போர்க்குற்றங்கள் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி தனது பரிந்துரைகளை அரசிடம் வழங்கியது. இந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான செயற்றிட்டத்துக்கு இலங்கை அமைச்சரவை கடந்த வாரம் ஒப்புதல் அளித்தது.

இந்நிலையில் இந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடங்கியுள்ளதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் அமுல்படுத்தக்கூடிய பரிந்துரைகள், நீண்டகாலத்தில் அமுலாக்கக்கூடிய திட்டங்கள் என்று பிரிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# செம்மண்குன்றில் இன்று மீள்குடியமர்வு

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அம்பலன்பொக்கணை செம்மண்குன்று கிராமத்திற்கான மீள்குடியேற்றம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு திட்டமிடல் பணிமனை அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள 38 குடும்பங்களை சேர்ந்த 127 பேர் தொடர்பான விபரங்கள் செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளவர்கள் பதிவுகளின் பின்னர் இரணைப்பாலையில் தங்க வைக்கப்பட்டு தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், துணுக்காய், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்களில் 30 ஆயிரத்து 664 குடும்பங்களை சேர்ந்த 97 ஆயிரத்து 612 பேர் இதுவரை மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-9-266)

# இந்திய அரசின் முதலீட்டில் எண்ணெய் ஆலை அமைப்பு

## மறுக்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனம் 3.6 மில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை இலங்கையில் நிறுவவுள்ளதாக வெளியான ஊடகத் தகவல்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் பெற்றோலியத்துறை அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவது தொடர்பாக எந்தவொரு இந்திய நிறுவனத்துடனும் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் 3.6 மில்லியன் டொலர் முதலீட்டில் ஆண்டுக்கு 5 அல்லது 9 மில்லியன் தொன் மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் திறனுள்ள ஆலையை நிறுவவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறையில் தங்கியிருந்த அமெ.பிரஜை உயிரிழப்பு

(உணவட்டுன)

உணவட்டுன பிரதேசத்தில் சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த அமெரிக்க பிரஜை ஒருவர் அவர் தங்கியிருந்த அறையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். ஜோர்ஜ் லெப் என்ற அமெரிக்க பிரஜையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 27 ஆம் திகதி இலங்கை வந்துள்ளதுடன் 28 ஆம் திகதி மேற்படி பிரதேசத்தில் இருக்கும் விடுதியொன்றில் தங்கியிருந்தார். விடுதியில் காலை உணவை உண்ட பின்னர் தனது அறைக்கு சென்ற அவர் மதிய உணவுக்கு வெளியில் வராத காரணத்தினால் விடுதி ஊழியர்கள் பார்த்த போது அவர் உறங்கி கொண்டிருப்பதை கண்டுள்ளனர்.

ஊழியர்கள் அவரை அழைத்தபோது அவர் மறுமொழி பேசாததால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (அ-2)

# பாதுகாப்பு செயலாளரை எவராலும் ஏமாற்ற முடியாது

## கொழும்பு மேயர் கூறுகிறார்

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஒருவராலும் ஏமாற்ற முடியாது என கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மேற்கொள்ளப்படுகின்றவர்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களின் பொருட்டு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவிப்பதற்கான பிரேரணை ஒன்றை கொழும்பு மாநகர சபையில் நிறைவேற்றப்படாமைக்காக மாநகர முதல்வரின் செங்கோலை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் திருடிச் சென்றனர். இது தொடர்பில் கருத்து வெளியிடும்போது தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவை இவ்வாறு பொய்யான பிரேரணைகளை நிறைவேற்றி ஏமாற்ற முடியாது. ஏற்கனவே இராணுவத் தளபதி ஒருவர் இவ்வாறு அவரை ஏமாற்ற முனைந்து தற்போது அதற்கான பலனை அனுபவிப்பதாகவும் முஸம்மில் சுட்டிக் காட்டினார். (அ-2)


யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

நவோதயா பாடசாலை

வயாவிளான்

வருடாந்த பரிசளிப்பு விழாவும்

வயவன் மலர் வெளியீடும்–2012

காலம்:-03.08.2012 வெள்ளிக்கிழமை

நேரம்:-முற்பகல் 9.00 மணி

இடம்:- ஆ.சி. நடராசா கலையரங்கம்

தலைவர்:-திரு.க.கனகராசா (கல்லூரி முதல்வர்)

பிரதம விருந்தினர்:-

உயர்திரு.சிவலிங்கம் சத்தியசீலன் அவர்கள்

(செயலாளர்,கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர்:-

உயர்திரு.சு.சண்முககுலகுமாரன்

(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பளை) )

கௌரவ விருந்தினர்:-

உயர்திரு.ம.துஷ்யந்தன் (வயவன்)

(உதவிப்பணிப்பாளர் திட்டமிடல் ,மாகாண திட்டமிடல் செயலகம், வடமாகாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

23.07.2012 பாடசாலைச் சமூகம்

(சு-680)



ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்

ம்ருத்திக்கா பிருந்தாவனம், நல்லூர், யாழ்ப்பாணம்

ஸ்ரீ ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின்

341 ஆவது வருட பிருந்தாவன பிரவேச ஆராதனை

இடம்:-159A(363), கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்,

நிகழ்வு:-

01.08.2012 புதன்கிழமை மாலை 4.15 - சத்யநாராயண பூஜை, திருவிளக்கு பூஜை, தொடர்ந்து திருக்கதவு திறக்கப்பட்டு ஸ்ரீராகவேந்ரா சுவாமிகளுக்கு விஷேட அபிஷேகம், அலங்கார பூஜை இடம்பெறும்.

02.08.2012 மாலை 6.30 - யாழ். நாச்சிமார் கோவிலடி ஸ்ரீதர் வில்லிசை குழு வழங்கும் வில்லுப்பாட்டு வாக்குக்கு அருணகிரி

03.08.2012 மாலை 6.30- வீணை இசை- திருமதி குமுதா உமாகாந்தன் மிருதங்கம்- திரு.செ. துரைராஜா, தபேலா- திரு.ப. சியாமகிருஸ்னா

04.08.2012 காலை 8.30- சனிக்கிழமை அபிஷேகம் அர்ச்சனை ஊஞ்சல் தொடர்ந்து சுவாமிகள் திருக்கதவு சாத்துதல்

05.08.2012 காலை 9.00 மணி ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் விஷேட அபிஷேகம், தீபஆராதனை, பிரசாதம் வழங்கல்

363, கோவில் வீதி, நல்லூர். (140) திருமதி சிவசிதம்பரம் சசிதேவி தர்மகர்த்தா.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொறுமை இல்லாத மனிதனும் எண்ணெய் இல்லாத விளக்கும் ஒன்று.

–ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அன்பான தமிழ் இளைஞர்களே! எங்களிடம் இல்லாதது என்ன?

காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்குப் பெயர்போன இடம். அங்கு யாராவது பட்டுச் சேலை வாங்குவதற்குச் சென்றால் போதும்; அங்கிருப்பவர்கள் வாடிக்கையாளர்களை பாயில் இருத்தி பட்டுச் சேலைகளை விரித்து விடுவார்கள்.

எப்படியாவது பட்டுச் சேலையை விற்றுவிட வேண்டும் என்பது அவர்களின் திட்டம். சில வேளைகளில் வாடிக்கையாளர்கள் சேலை எதனையும் வாங்கவில்லையாயினும் அது குறித்து அவர்கள் இம்மியும் மனஸ்தாபப்பட மாட்டார்கள். அந்தளவிற்கு அவர்களிடம் பொறுமையும் நிதானமும் இருக்கிறது.

இதுபோன்றே முஸ்லிம், சிங்கள வர்த்தகர்களும் தங்கள் வியாபாரம் தொடர்பில் சலிப்படையாமல் வாடிக்கையாளர்களிடம் நடந்து கொள்வர்.

அவர்களிடம் இருக்கக்கூடிய பொறுமையும் நிதானமும் அவர்கள் தொழிலுக்கு சாதகமாக இருப்பதுடன் வாடிக்கையாளர்களும் அந்த நிறுவனத்தின் மீது நம்பிக்கை கொள்வர்.

ஆனால், வர்த்தக முயற்சிகள் மற்றும் இதர நிறுவனங்களில் கடமையாற்றும் வட பகுதித் தமிழ் இளைஞர்கள் ஏனோ தெரியவில்லை சடுதியாக கோபமடைவதும் உணர்ச்சி வசப்பட்டுக் கதைப்பதும் சில வேளைகளில் தமது நிறுவனத்திற்கு வருகின்ற வாடிக்கையாளர்கள் தொடர்பில் கவனமற்றவர்களாக இருப்பதும் நடந்தேறுகின்றது.

இத்தகைய முற்கோபங்களும் உணர்ச்சி வசப்படுதல்களும் வர்த்தக முயற்சிகளுக்குப் பாதகமாக அமையும் என்பதை அவர்கள் உணர மறந்து விடுகின்றனர்.

இத்தகைய செயல்கள் எங்கள் இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கு தடையிடுவதாகக் கருதிக் கொள்ளலாம்.

எனவே அன்புக்குரிய வட பகுதித் தமிழ் இளைஞர்களே! நாங்கள் மிகவும் ஆற்றல் மிக்கவர்கள். எங்களிடம் புதிய சிந்தனைகளும் அவற்றுக்கு உயிரோட்டம் கொடுக்கும் ஆற்றலும் உள்ளவர்கள்.

இத்தகைய திறமைகள் எங்களிடம் இருந்தும் எங்களிடம் இருக்கக்கூடிய பொறுமை பேணாத நிலையும் சகிப்புத்தன்மையை கடைப்பிடிக்கத் தெரியாத போக்கும் எடுத்ததெற்கெல்லாம் கதைத்து அதன்மூலம் எல்லாவற்றையும் போட்டுடைக்கும் இயல்பும் அனைத்துக்கும் பாதகமாக அமைந்துவிடுகிறது.

எனவே எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அதில் நிதானத்தை–பொறுமையை –இனியன பேசும் பழக்கத்தை –இன்முகத்துடன் வரவேற்கும் முறைமையை முதலில் கடைப்பிடிப்போம். அதுவே எங்களை உயர்த்திக் கொள்ள ஒரே வழியாகும்.

# சுடப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் புலி உறுப்பினர்கள்

## லங்காதீப பிரதம ஆசிரியர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும் தமது உறுப்பினர்களை தமிழ் ஊடகங்களில் பணியாற்ற அனுப்பினார்கள். அவர்கள் அனுப்பிய தமிழ் ஊடகவியலாளர்களே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். கடந்த காலங்களில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களே என சிங்கள வாரப்பத்திரிகையான லங்காதீப பிரதம ஆசிரியர் ஆரியநந்த தும்பவிகாவத்த தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை குருநாகலிலுள்ள இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய சூழலில் போதைவஸ்து வியாபாரம் செய்பவர்கள் தாராளமாக பத்திரிகைகளைப் புதிதாக ஆரம்பித்து நடத்தி வருகின்றார்கள். இதுபோலவே அன்றைய சூழலிலும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமது உறுப்பினர்களை தமிழ் ஊடகங்களில் பணியாற்ற அனுப்பினார்கள். அந்த உறுப்பினர்களே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள் என தும்பவிகாவத்த கூறியுள்ளார். (அ-2)

# ரூ.25 கோடி பெறுமதியான போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

சுமார் 25 கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகைப் போதைப் பொருள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

டோஹா, கட்டாரில் இருந்து இலங்கையை வந்தடைந்த ஈரான் நாட்டவர்கள் இருவரிடம் இருந்து இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக சுங்கக் கட்டுப்பாட்டுப்பிரிவின் அத்தியட்சகர் நிஹால் அழகப்பெரும கூறினார்.

மெத் பெட்டமைனட் எனப்படும் இந்த போதைப்பொருள் 1.8 கிலோ கிராம் சந்தேகநபர்களின் பயணப் பொதிகளில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் சுற்றுலா பயணிகளாக நாட்டிற்குள் நுழைய முற்பட்டுள்ளதுடன் அநுராதபுரம் பிரதேச ஹோட்டல் ஒன்றின் அறைகளையும் முன்கூட்டியே ஒதுக்கியுள்ளதாக விமான நிலைய சுங்கக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-2)

# வாக்காளர் அட்டை விநியோகம்

மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் ஓகஸ்ட் 17-ம் திகதிக்கும் ஓகஸ்ட் 30ஆம் திகதிக்கும் இடையில் விநியோகிக்கப்படும் என தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரட்ணாயக்க கூறினார்.

கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு செப்ரெம்பர் 8-ம் திகதி நடைபெறவுள்ளது.

இத் தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு ஓகஸ்ட் 27, 28-ம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஜனாதிபதி மஹிந்த மட்டுமல்ல காங்கிரசும் குற்றவாளிதான்

## சட்டமன்ற உறுப்பினர் காமராஜ்

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் முதல் அறிமுக கலந்தாலோசனைக் கூட்டம் கரூரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காமராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில அமைப்பு செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எடப்பாடி வை.காவேரி, கரூர் மாவட்ட அமைப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

கட்சியின் வளர்ச்சிக்காக பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய காவேரி உரையாற்றியபோது,

இலங்கை உள்நாட்டு போருக்கு முன் வேலூர் சிறைச்சாலையில் பிரியங்கா நளினியை சந்தித்து பேசிய பின்னர்தான் இந்தியா ரேடர்களையும் இராணுவ வீரர்களையும் இலங்கைக்கு அனுப்பியது.


அதன் பின்னர் முள்ளிவாய்க்காலில் இலங்கைத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இந்நிலையில் இலங்கை ஜனாதிபதியை மட்டும்தான் குற்றவாளி என்று அனைவரும் கூறிவருகின்றனர்.

ஆனால் போருக்கு தேவையான உபரகணங்களையும் வீரர்களையும் அனுப்பி வைத்த காங்கிரஸ் கட்சியினரும் தான் குற்றவாளிகள் என்று தெரிவித்தார். (அ-2)

# சத்திய தரிசனம்



எனது இதயம் முழுவதும் அன்பினால் மட்டுமே நிறைந்திருக்கிறது. எனது அன்பை அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறேன். எல்லோரும் என்னைச் சேர்ந்தவர்கள். நான் அனைவருக்கும் சொந்தமானவன். யாரிடமும் எனக்கு வெறுப்பு கிடையாது. எல்லோரும் என்னை விரும்புகிறார்கள். நான் அனைவரையும் விரும்புகிறேன். அன்பு என்பது உங்களுக்கும் எனக்கும் இடையே நிலவும் மிக நெருங்கிய உறவு.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## அரணை கடித்தால் மரணம் நிகழுமா?

அரணை கடித்தால் உடன் மரணம் என்று ஒரு நம்பிக்கை பண்டைக் காலத்தில் இருந்து வந்தது.

வளையிலிருந்து தலையை மட்டும் நீட்டும் அரணையின் கழுத்து வரையுள்ள பாகம் மட்டுமே வெளியில் தெரியும் என்றதால் ஏதாவது விஷப்பாம்பாக இருக்கும் என்று தவறாகப் புரிந்து கொள்வதுண்டு.

விஷம் தீண்டுவதால் வரும் மரண்ங்களில் பெரும்பான்மையானதும் பயத்தினால் நிகழ்கின்றன என்பது நிஜம். அரணை கடித்தால் மரணம் என்ற நம்பிக்கையிலிருந்து யாராவது அதிக பயத்தினால் வந்த இருதய நோயால் இறந்து போயிருக்கலாம். இதுபோன்ற நிகழ்வுகள் இந்த நம்பிக்கையை உறுதி செய்யுமாறு அமைந்திருக்கலாம் என்று ஒரு விஷ சிகிச்சை நிபுணர் கூறியிருக்கின்றார்.

இந்தத் தகவல் பலர் கையில் வந்துசேர்ந்து நாளடைவில் அரணையை ஒரு விஷப் பிராணியாகக் காணத் தொடங்கினர் என்று நம்புவதில் தவறில்லை.

எப்படியும் அரணை எப்போதாவது தான் கடிக்கும் என்றும் கடிக்க நினைத்து வந்தாலும் ஆளுக்கருகில் வரும்போது மறந்து திரும்பிவிடும் என்றும் கருதுகின்றனர். கடிக்க உத்தேசித்தநபர் அல்ல என்று புரிந்துகொண்டுதான் திரும்பச் செல்கின்றது என்றும் ஓர் நம்பிக்கை உண்டு. இந்த மறதியின் கதையை வைத்து சில நபர்களை அரணை புத்தியுடையவன் என்று கூறுவதுண்டு.

சில அரணைகளின் இரு பக்கங்களிலும் காணும் நிறம், விஷம் சேகரித்து வைத்திருப்பதாக பலரும் கருதுகின்றனர். ஆனால் அரணை விஷமில்லாத ஓர் சாதுவான பிராணி என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அரணையின் இருபக்கங்களில் சிவப்பு கலந்த மஞ்சள் நிறம் இனவிருத்தி காலத்தில் ஆண் அரணையில் மட்டுமே காணப்படும். இதற்கும் விஷத்துக்கும் சம்பந்தமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் பயிற்சிப்பட்டறை





(வேலணை)

யுவர் பிரண்ட் பவுண்டேசன் ஆதரவுடன் வடமாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிப் பட்டறை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இப்பயிற்சிப் பட்டறை இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னணிப் பயிற்சியாளர்களினால் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் 100 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 15 வயதிற்கும் 13 வயதிற்கும் உட்பட்ட பாடசாலை கிரிக்கெட் வீரர்கள் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டுள்ளனர்.

இப்பயிற்சிப்பட்டறையில் வீரர்கள் உற்சாகமாக செயற்படுகின்றனர் எனவும் இப் பயிற்சிப்பட்டறை வடமாகாண கிரிக்கெட் வீரர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாகவும் பெறுமதிமிக்கதாகவும் அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.




கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய *சுப்பிரமணியம் மாலதி* முன்பள்ளியின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் J.P அவர்களை நிலையத்தின் செயலாளர் செ.சண்முகசுந்தரம் மாலை அணிவித்து வரவேற்பதனையும் மாணவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதனையும் படங்களில் காணலாம்.

# சதுரங்கப்போட்டி



யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான சதுரங்கப் போட்டியின் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆர்.செந்தில்மாறன் முதலாம் இடத்தினையும் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.சுரேஜினி முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

கடந்த 26, 27 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்திய சதுரங்கப் போட்டியில் 3 சுற்றுக்களிலும் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் 10 பேர் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்ட முன்னணி நட்சத்திர அணிகள் பங்குபற்றும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் திக்கம் இளைஞர், வதிரி பொம்மஸ் அணிகள் அடுத்த சுற்றுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் 9:1 என்ற கோல்கணக்கில் திக்கம் இளைஞர் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் புத்தூர் வீனஸ் அணியை 8:4 என்ற கோல்கணக்கில் வதிரி பொம்மஸ் அணி வெற்றி பெற்றது. இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (3-24)






# பாசையூர் சென்.அன்ரனிஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்திய லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று 2012 ஆம் ஆண்டுக்கான சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (3)





இருபாலை ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் UR Friend Foundation நிறுவனத்தின் தலைவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட சிறார்களின் சீருடைகளையும் அவர்களுக்கான பரிசில்களையும் மேற்படி நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் UR Friend Foundation தலைவர் மங்கள விளக்கேற்றுவதனையும் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீச்சலில் பெல்ப்ஸ் புதிய சாதனை



லண்டன் ஒலிம்பிக்கில் ஆடவருக்கான 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் மைக்கல் பெல்ப்ஸ் வெள்ளிப் பதக்கம் வென்று உலக சாதனை படைத்துள்ளார்.

லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியின் ஆடவருக்கான 200 மீற்றர் நீச்சல் போட்டி நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதில் தென்னாபிரிக்க வீரர் சடில் லி குளோஸ் தங்கப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் கடைசி வினாடியில் தங்கப் பதக்கத்தை தவறவிட்ட அமெரிக்க வீரர் மைக்கல் பெல்ப்ஸ் வெள்ளிப் பதக்கம் வென்று உலக சாதனை படைத் துள்ளார்.

இந்த ஒலிம்பிக்கில் பெல்ப்ஸ் இதுவரை 2 வெள்ளி மற்றும் ஒரு தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.


இதன்மூலம் ஒட்டுமொத்தமாக ஒலிம்பிக்கில் 19 பதக்கங்கள் வென்று 32 வயதான பெல்ப்ஸ் உலக சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக ரஷ்யாவைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான லாரிசா லடினினா 18 பதக்கங்கள் வென்றதே இவ்வகையில் சாதனையாக இருந்தது.

ஒலிம்பிக்கில் மொத்தமாக 15 தங்கம் வென்றுள்ள பெல்ப்ஸ் அதிக தங்கம் வென்ற வீரர் என்ற சாதனையையும் தனிநபராக அதிக தங்கம்(9) வென்றவர் என்ற சாதனையையும் தன் வசப்படுத்தியுள்ளார்.

ஏற்கெனவே கடந்த 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் 8 தங்கப்பதக்கங்களை வென்றதன் மூலம் ஒரே ஒலிம்பிக்கில் அதிக தங்கப் பதக்கம் வென்றவர் என்ற சாதனையும் பெல்ப்ஸ் வசமானது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் படகுப் போட்டி பிரான்ஸ் தங்கம்




லண்டன் ஒலிம்பிக்கில் ஆடவருக்கான தனிநபர் துடுப்புப் படகுப் போட்டியில் பிரான்ஸ் வீரர் டோனி எஸ்டான் கெட் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக்கில் ஆடவருக்கான தனிநபர் துடுப்புப் படகுப் போட்டி நடைபெற்றது.

இதில் பந்தய தூரத்தை 97 நிமிடங்களில் கடந்து பிரான்ஸ் வீரர் டோனி எஸ்டான் கெட் தங்கத்தை தட்டிச் சென்றார்.

இப் போட்டியில் ஜேர்மனி வீரர் சிடெரிஸ் டிசியாடிஸ் வெள்ளிப் பதக்கமும் ஸ்லோவாக்கியா வீரர் மைக்கல் மார்ட்டிகன் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

# பளுதூக்கலிலும் சீனாவுக்கு தங்கம்



லண்டன் ஒலிம்பிக் பளுதூக்குதல் போட்டியில் 58 கிலோ எடைப்பிரிவில் சீன வீராங்கனை லீ ஜுவேயிங் 2 ஒலிம்பிக் சாதனையை நிகழ்த்தியதுடன் தங்கப் பதக்கமும் வென்றார்.

இதற்கு முன்னர் 2 முறை உலக சம்பியன் வென்ற லீ, இந்த போட்டியில் ஸ்னாட்ச் பிரிவில் 108 கிலோ மற்றும் மொத்தம் 246 கிலோ பளு தூக்கி அசத்தினார்.

இதன் மூலம் தனது நாட்டைச் சேர்ந்த சென் யான் கிங் என்பவர் கடந்த ஒலிம்பிக்கின்போது நிகழ்த்திய சாதனையை முறியடித்தார்.

அவரைவிட இப்போது 2 கிலோ அதிக பளுவை லீ தூக்கியிருந்தார்.

லீயை தொடர்ந்து 236 கிலோ தூக்கிய தாய்லாந்து வீராங்கனை பீம்சிரி வெள்ளிப் பதக்கமும், 235 கிலோ தூக்கிய உக்ரைன் வீராங்னை யுலியா கலினா வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## இன்று அதிகாலை வரையான நிலைவரப்படி

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 17 | 9 | 4 | 30 |
| அமெரிக்கா | 11 | 8 | 9 | 28 |
| தென் கொரியா | 6 | 2 | 4 | 12 |
| பிரான்ஸ் | 5 | 3 | 4 | 12 |
| வட கொரியா | 4 | 0 | 1 | 5 |

# ஒலிம்பிக்: குதிரையேற்றத்தில் ஜேர்மனிக்குத் தங்கம்



(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக்கில் குதிரையேற்றத்தில் தனிநபர் பிரிவில் ஜேர்மனி வீரர் மைக்கல் ஜங் தங்கம் வென்றுள்ளார்.

இப்போட்டியில் களமிறங்கிய பல வீரர்களைப் பின்னுக்குத் தள்ளி குதிரையை சிறப்பாக இயக்கிய சுவீடன் வீராங்களை அல் ஹறாட்சன் ஒஸ்தால்ட் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

அதேபோல் ஜேர்மனி வீராங்கனையான ஒளபாரத் களத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வெண்கலப் பதக்கம் வென்றார்.

மைக்கல் வென்ற இப் பதக்கத்துடன் சேர்த்து ஜேர்மனி அணி 3 தங் கங்களை வென்றுள்ளது.

அதில் 2 தங்கங்கள் குதிரையேற்றத்தில் வெல்லப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீச்சலில் சீனாவுக்கு தங்கம்



லண்டன் ஒலிம்பிக்கில் மகளிர் 200 மீற்றர் மெட்லே நீச்சல் போட்டியில் சீன வீராங்கனை ஷிவான் யே தங்கப் பதக்கம் வென்றார்.

லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக்கின் மகளிர் 200 மீற்றர் மெட்லே நீச்சல் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இப்போட்டியில் பந்தயத் தூரமான 200 மீற்றர் தூரத்தை 2.07 வினாடிகளில் கடந்து ஷிவான் யே தங்கப் பதக்கம் வென்றார்.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய வீராங்கனை அலிஷியா கவுட்ஸ் வெள்ளிப் பதக்கமும், அமெரிக்க வீராங்கனை கெயிட்லின் லெவரன்ஸ் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

16 வயதேயான சீன வீராங்கனை ஷிவான் 400 மீற்றர் மெட்லே பிரிவிலும் தங்கம் வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அடுத்த பிர...

சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவரான குமார் நடேசன் இது சம்பந்தமான இணைப்பாளராக செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

பசில் ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் நியமிக்க தற்போது, விரிவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக பல இர்கசிய பேச்சு வார்த்தைகள் கொழும்பு ஹில்டன் விடுதியில் நடைபெற்றுள்ளன. ஹில்டன் விடுதியின் தலைவர் குமார் நடேசன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹில்டன் விடுதியில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தைகளில் இரண்டு சிரேஷ்ட ஊடகவியலாளர்களும், அமைச்சர்களின் இணைப்பு செயலாளர்கள் சிலரும், எதிர்க்கட்சியின் செயற்பாட்டாளர்கள் சிலரும் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது என அந்த கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (எ-11)

---

## நாடுகடத்த...

இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருவதாகவும், சில புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதாகவும், உண்மையில் திருப்பி அனுப்பப்படும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் இலங்கை படையினரால் துன்புறுத்தப்படுவதில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

---

## இந்தியாவில்...

இரவு 7.30 மணி முதல் 7.45 மணிக்குள்ளாக நான்கு குண்டுகளும் வெடித்துள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புக்கள் அனைத்தும் ஒரு கிலோ மீற்றர் சுற்றளவுக்குள் நடந்துள்ளன. (எ-11)

---

## அரசுக்கு எதிரா...

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸா நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் லால் காந்த, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் உட்பட்ட பல முக்கியஸ்தர்களும் பங்கு கொண்டிருந்தனர். (எ-6)

---

## சீனாவுக்கு...

தீவிற்கான சர்வதேச நாணய நிதிய வதிவிடப் பிரதிநிதி கோசி மாத்தாய் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படாது விட்டால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2011ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியில் 4.9 வீதமான அளவே இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளை உயர்த்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Promotional Field Officers**
சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவை

சந்தைப்படுத்தலில் அனுபவம் உள்ளோர் மற்றும் காப்புறுதி முதலானவற்றில் தற்போது பணிபுரிபவர்கள் பகுதி நேரமாகவும் பணி புரியலாம்

நிலையான ஊதியமும் ஊக்குவிப்பு தொகையும் உண்டு
இன்றும் நாளையும் காலை 9 முதல் 10 வரை நேரில் வரலாம்

**Jaffna Directory**
182, Stanley Road, Jaffna
077 520 2747

# புலிகளுக்கு எதிரான தடை...

2011ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக 2009ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட போதிலும் புலிகளின் நிதி வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருவதாக ராஜாங்கத் திணைக்கள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு முழுவதும் தமிழீழ விடு தலைப் புலிகளின் நிதி வலையமைப்பு இயங்கி வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச மற்றும் நிதி வலையமைப்புக்கள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் தற்போதைக்கு மீள ஒழுங்கிணையக் கூடிய அபாயம் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-2,11)

# நன்றி நவில்கின்றோம்



எமது தாயார் திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் திடீர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நேரம் முதல் அவர் உயிர் நீத்து 29.07.2012 பொறளை கனத்தையில் தீயில் சங்கமமாகும் வரை எம்மோடு இணைந்து செயலாற்றிய அன்பு நெஞ்சங்களுக்கும் அனுதாபம் தெரிவித்து, எமது துக்கத்தில் பங்கெடுத்த அனைவர்க்கும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்கள், விநியோகம் செய்தோர் தொலைபேசி, தொலைநகல், தபால் அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தோர், மலர் அஞ்சலி செலுத்தியவர்கள் மற்றும் எமது இல்லத்திலிருந்து பொறளை மயானம் வரை அன்னையின் பூதவுடல் தாங்கிய பேழையை சுமந்துவந்த அனைவரிற்கும், சகலவழிகளிலும் உதவி புரிந்தவர்களிற்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ.ச.பே.நாகரத்தினம் - குடும்பத்தவர்கள்
இ.ச.பே.கணேசலிங்கம் - குடும்பத்தவர்கள்
பராசக்தி - குடும்பத்தவர்கள்
பரமேஸ்வரி - குடும்பத்தவர்கள்
சவுந்தராம்பிகை - குடும்பத்தவர்கள்
அன்னபாக்கியம் - குடும்பத்தவர்கள்

(சி-683)

# மகிந்த அரசின் ஆட்சி...

நேற்று யாழ்.நகரை வந்தடைந்தது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்பட வேண்டி உள்ளது.

பிரச்சினைகளைப் பொறுத்தவரை தென் பகுதிக்கு வேறாகவும் வடபகுதிக்கு வேறாகவும் இல்லை. எல்லாம் ஒரே தன்மையாகவே உள்ளது.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கே உண்டு.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளியுலகிற்கு எடுத்துக் கூறும் வகையிலேயே இந்த கண்டனப் பேரணியை நாம் ஆரம்பித்தோம்.

பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கண்டனப் பேரணி 6-வது நாளான (இன்று) முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினையை வெளிப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு அதை உணர்த்தும் வகையில் இந்தக் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நாட்டில் சகலருக்கும் பிரச்சினை உள்ளது. அரச ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், ஏன் நீதவான்களுக்குக் கூட பிரச்சினை உள்ளது.

நீதவான்களுக்குக் கூட மரியாதை கொடுக்காது அவர்களை அச்சுறுத்தி அராஜக ஆட்சியினை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நடத்தி வருகின்றது.

எனவே தேசிய ஒற்றுமையை வளப்படுத்த சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஒற்றுமையைப் பேணி எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காக நாம் இங்கு வந்துள்ளோம்.

முதலாளித்துவ ஆட்சியினால் இத்தனை பிரச்சினையையும் தீர்க்க முடியாது.

சோசலிச ஆட்சியை நிலை நாட்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கை வரலாற்றில் இதுவே நீண்ட கண்டனப் பேரணி. இதனை வெற்றிகரமாக நாம் நிறைவு செய்துள்ளோம்.

மகிந்த அரசாங்கம் இதனைத் தடுக்க எடுத்த முயற்சியில் படுதோல்வி கண்டது.

நீதிமன்றில் தடை உத்தரவு பெற முற்பட்டது. இருந்தும் அது பயனளிக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கத்தின் ஆரம்ப தோல்வியாகவும், ஆட்சியை முடிபுக்குக் கொண்டு வர இது தொடக்க எதிர்ப்புப் போராட்டமாகவும் விளங்கும்.

யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு 3 வருடங்கள் ஆகிறது. மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு இன்னும் தீர்வுதான் காணப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# பலத்தை...

அவர்களின்படைபலத்தை அறிந்துகொள்ளவே, இப்போது பயிற்சி அளிக்கிறோம்.

இலங்கைப் படையினர் அமெரிக்கா, சீனாவிடம் பயிற்சிபெற்றால் அவர்களின் பலத்தை எம்மால் அறிந்து கொள்ள முடியுமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு அருகில் 12 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (தரகர் இல்லை)

தொடர்புகளுக்கு:-
0778736996

(139)

**MyWay இன் விடுமுறைகால இலவச ஆங்கில பயிற்சிநெறி**

நாள் : 04.08.2012 சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 9 - 10 | ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர் |
| காலை 10 - 11 | 4 முதல் 6 வயதுவரையான சிறுவர்கள் (பெற்றோருடன் வர வேண்டும்) |
| காலை 11 - 12 | A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள். |
| மாலை 4 - 5 | இளைஞர், யுவதிகள், A/L எடுத்தோர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர். |
| மாலை 5 - 6 | அரச தனியார் அலுவலர், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர் |

பயிற்சிக்கு வரும் அனைவருக்கும் பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

MyWay 182, Stanley Rd, Jaffna
077 520 2747

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் ஸ்ரீமதி வேதநாயகி அம்மா நகுலேஸ்வரக் குருக்கள்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

E.S.P. நாகரத்தினம் அன் கோ,
கஜமுகன் ஹாட்வெயர்
இல.,147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஆஸ்திரேலியாவுக்கு குடும்பமாக (சட்டரீதியாக) செல்ல அரைவாசிப்பணம் போதுமானது**

சர்வதேச விசா ஆலோசனைக் கூட்டாளிகளுடன் நாம் இணைந்தமையால் இது சாத்தியமாயிற்று. இன்னும் என்ன தாமதம்! 54 வயதுக்குட்பட்டவரா நீங்கள்! விரைந்து வாருங்கள்! மிகுதியை நேரில் விலாவாரியாகப் பேசிக்கொள்வோமா?

**திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்**

முன்மாதிரியான விசா ஆலோசனை
விற்பனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் லேன், பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். T.P. : 021 221 9016



(சி-682)

**வேலையாட்கள் தேவை**

வள்ளுவர் சிறுகைத்தொழிலகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு :-
0213208835, 0770691465

(142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.